தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 25.09.2013

### அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுவையில் மழை வாய்ப்பு

தமிழகம் மற்றும் புதுவையில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் செவ்வாய்க்கிழமை பொதுவாக வறண்ட வானிலையே காணப்பட்டது. அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் மற்றும் புதுவையில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரை சில இடங்களில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும்.

வெப்பநிலை குறைந்தபட்சம் 81 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும் அதிகபட்சமாக 97 டிகிரி ஃபாரன்ஹீட்டாகவும் இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது

### காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு அதிகரிப்பு

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக மேட்டூர் அணையிலிருந்து, காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 20 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

தற்போது, காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் நீரின் தேவை அதிகரித்ததால், செவ்வாய்கிழமை மாலை முதல் திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 22 ஆயிரம்

கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால், திங்கள்கிழமை மாலை நொடிக்கு 4,762 கன அடியாக இருந்த நீர்வரத்து, செவ்வாய்கிழமை மாலை நொடிக்கு 17,668 கன அடியாக அதிகரித்தது. செவ்வாய்கிழமை, மாலை அணையின் நீர்மட்டம் 107.47 அடியாகவும், நீர் இருப்பு 74.86 டி.எம்.சி. யாகவும் இருந்தது.

**ஒரு கிலோ வெங்காயத்தை ரூ.2-க்கு விற்று ஆர்ப்பாட்டம்**




தொடர் விலை உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரு கிலோ வெங்காயத்தை ரூ.2 -க்கு விற்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சென்னை வள்ளுவர்கோட்டம் அருகே செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளர் த.வெ.வேணுகோபால் தலைமை வகித்தார். பெட்ரோல், டீசல், வெங்காயம் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வை மத்திய அரசு கட்டுப்படுத்த வேண்டும், கச்சத்தீவை மீட்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கட்சியினர் கோஷமிட்டனர்.

அதைத் தொடர்ந்து வெங்காயத்தின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதைக் கண்டித்து தாங்கள் கொண்டு வந்த வெங்காயத்தை ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்தில் குவியலாகக் கொட்டினர். ஒரு கிலோ வெங்காயம் ரூ.2 என கூவி விற்றனர். கிலோ ரூ.60-க்கும் அதிகமாக விற்கப்படும் வெங்காயம் இரண்டு ரூபாய்க்கு விற்கப்பட்டதால் அந்த வழியில் வந்த பொதுமக்கள் போட்டி போட்டிக்கொண்டு வெங்காயத்தை வாங்கிச் சென்றனர். ஆர்ப்பாட்டம் தொடங்கிய 30 நிமிஷங்களில் 4 மூட்டைகளில் கொண்டுவரப்பட்ட 200 கிலோ வெங்காயம் முழுவதும் விற்றுத் தீர்ந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் போரூர் சண்முகம் உள்பட கட்சியின் நிர்வாகிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி ஆர்ப்பாட்டம்**

பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் காஞ்சிபுரத்தில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

காஞ்சிபுரம் ஆட்சியர் அலுவலகம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாநிலப் பொருளர் மா.சங்கர் தலைமை வகித்தார்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பால் உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டனர். சாலையில் பாலை ஊற்றி அவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

பால் உற்பத்தியாளர்களுக்கு பசும்பால் லிட்டருக்கு ரூ. 25- ஆகவும், எருமைப்பால் லிட்டருக்கு ரூ.35-ஆகவும் உயர்த்தி வழங்க வேண்டும். நபார்டு மானியத்துடம் கறவை மாட்டுக்கு கடன் வழங்குவதாக ஆவின் பால் சங்கங்களிடம் பட்டியல் பெற்று 3 மாதங்களாகியும் இதுவரை வழங்கவில்லை.

எனவே உடனடியாக கடன் வழங்க வேண்டும். 50 சதவீத மானிய விலையில் ஆவின் மாட்டுத்தீவனம் வழங்கிட வேண்டும். பால் உற்பத்தி மானியமாக லிட்டருக்கு ரூ.4 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

மாநிலப் பொதுச் செயலர் கே.முகம்மது அலி, மாவட்டத் துணைச் செயலர் சி.சங்கர், தமிழ்நாடு விவசாயிகள் சங்க வட்டச் செயலர் இ.லாரன்ஸ் உள்டோர் கலந்து கொண்டனர்.

**நேரடி நெல் கொள்முதல் மையங்கள் மாவட்டம் முழுவதும் திறக்கப்படுமா?**

திருவள்ளூர் மாவட்டம் முழுவதும் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறக்க வேண்டும் என மாவட்ட விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் 3 ஆயிரத்து 422 சதுர கிலோமீட்டர் பரப்பளவு உடையது. இதில் 1 லட்   சத்து 84 ஆயிரத்து 198 ஹெக்டேர் பரப்பளவில் விவசாய நிலம் உள்ளது. இதில் 40 சதவீதத்தில் தோட்டப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் திருவள்ளூர், திருத்தணி, பள்ளிப்பட்டு, கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை, பூந்தமல்லி, பொன்னேரி, அம்பத்தூர், மாதவரம் ஆகிய 9 வட்டங்கள் உள்ளன. இதில் திருவள்ளூர், ஊத்துக்கோட்டை, திருத்தணி, பூந்தமல்லி, பொன்னேரி ஆகிய வட்டங்களில் விவசாயம் அதிகளவில் உள்ளது.

இந்நிலையில் மாவட்டத்தில் பருவத்திற்கேற்ப முறையாக மாவட்ட நிர்வாகம் சார்பில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்படுவதில்லை.  அப்படியே திறக்கப்பட்டாலும் இடைத்தரகர்களின் தலையீடு அதிகளவில் உள்ளது. இதனால் செங்குன்றத்தில் உள்ள தனியார் சந்தைக்கு மாவட்டத்தில் விளையும் அதிக அளவு நெல் விற்பனை செய்யப்படுகிறது. தனியார் சந்தையைச் சேர்ந்த வியாபாரிகள், இடைத்தரகர்கள் மூலம் நேரடியாக விவசாயிகள் இருக்கும் இடத்திற்கே வந்து நெல்லை எடுத்துச் செல்கின்றனர்.

இதனால் விவசாயிகளும் அதிகளவில் தனியார் வியாபாரிகளுக்கே குறைந்த விலைக்கு நெல்களை விற்பனை செய்கின்றனர். இது குறித்து ஊத்துக்கோட்டையைச் சேர்ந்த விவசாயி நடராஜன் கூறியது: பெரும் சிரமத்துக்கு மத்தியில் அறுவடை முடித்து நெல்களை விற்பனை செய்தாலும் விவசாயிகளுக்கு போதிய வருமானம் கிடைப்பதில்லை.

கடந்த 2012-ம் ஆண்டில் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று திருத்தணி வட்டத்தில் அமிர்தாபுரம், ஊத்துக்கோட்டை வட்டத்தில் கச்சூர், பொன்னேரி வட்டத்தில் செம்புலிவரம் ஆகிய பகுதிகளில் உள்ள செயல்முறைக் கிடங்குகளில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டன. இதில் விவசாயிகளுக்கு ஒரு குவிண்டாலுக்கு சன்ன கம் ரூ.1,180-க்கும், மோட்டா ரகம் ரூ. 1,130-க்கும் கொள்முதல் செய்யப்பட்டன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயம் அதிகளவில் உள்ளதால் அங்கு நெல்லின் ஈரப்பதம் 22 சதவீதம் வரை எடுக்கப்படுகிறது. ஆனால் திருவள்ளூர் மாவட்ட நெல்

கொள்முதல் மையங்களில் 15 முதல் 17 சதவீதம் மட்டுமே ஈரப்பதம் எடுக்கப்படுகிறது.

இதனால் விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்படுகிறது. நடப்புப் பருவமான சொர்னவாரியில் நவம்பர் மாதம் நெல் கொள்முதல் மையம் திறக்க வேண்டும்.

ஒரு வட்டத்துக்கு 2 நேரடி கொள்முதல் மையங்கள் திறக்க வேண்டும். நெல் கொள்முதல் மையங்களில் இடைத்தரகர்களை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும். அப்படி செய்தால் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் பயன்பெறுவர் என்றார் அவர்.

இது குறித்து வேளாண் துறை அதிகாரிகள் கூறியது: சொர்னவாரி பருவத்தில் இம்மாவட்டத்தில் 21 ஆயிரத்து 876 ஹெக்டேர் நெல் பயிரிடப்பட்டு அதில் 80 சதவீதம் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இதையொட்டி மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்படும்.

நெல் கொள்முதல் மையங்களின் எண்ணிக்கை மற்றும் விலை நிர்ணயம் ஆகியவை நுகர்பொருள் வாணிபக்கழகத்தினர் மூலம் அரசு அனுமதியுடன் நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் என தெரிவித்தனர்.

**கொடைக்கானலில் பீன்ஸ் விளைச்சல் அமோகம்**

கொடைக்கானலில் பீன்ஸ் விளைச்சல் அமோகமாக உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கொடைக்கானலில் செண்பகனூர், பிரகாசபுரம், அட்டக்கடி, வில்பட்டி,அட்டுவம்பட்டி, பள்ளங்கி, கோம்பை ஆகிய பகுதிகளில், பீன்ஸ் சாகுபடி செய்யப்பட்டிருந்தது.

நான்கு மாதங்களில் பீன்ஸ் விளையும். பீன்ஸ் செடிக்கு குச்சி குத்துதல், களையெடுத்தல், உரமிடுதல் போன்றவை நன்கு பராமரித்து வந்ததால், தற்போது அமோக விளைச்சல் கிடைத்துள்ளது. தற்போது, பீன்ஸ் எடுக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இங்கிருந்து, மதுரை, திருச்சி, தேனி உள்ளிட்ட மாவட்டங்களுக்கு பீன்ஸ் கொண்டு செல்லப்படுகிறது.

இது குறித்து, கொடைக்கானல் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கூறியது: கொடைக்கானலில் கடந்த 4 மாதங்களாக பருவமழை இல்லாததால், விவசாயம் பாதிக்கப்பட்டது. ஆனால், நாங்கள் சொட்டு நீர்ப்பாசன முறையில் பீன்ஸ் செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சினோம். இதனால், எங்களுக்கு நல்ல விளைச்சல் இருந்தது. இதன் பயனாக, மார்க்கெட்டில் நல்ல விலைக்கு விற்பனை செய்கிறோம்.

மழை இல்லாத காரணத்தால் செடிகளில் கருகல் நோய் ஏற்பட்டதில், பயிர்கள் சிறிது சேதமடைந்தன. இருப்பினும், அவ்வப்போது மழை பெய்ததால், நாங்கள் பயனடைந்துள்ளோம்.

கொடைக்கானலில் விவசாயிகளுக்கு விவசாய ஈடு பொருள்கள் மானியத்தில் வழங்குவதற்கு, தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கிறோம் என்றனர்.

**பால் விலையை உயர்த்தி வழங்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்**

பால் விலையை உயர்த்தி வழங்க வலியுறுத்தி, போடியில் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கத்தினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போடி தாலுகா கிளை சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், பசும்பால் லிட்டருக்கு ரூ. 5, எருமை பால் லிட்டருக்கு ரூ. 7 என உயர்த்தி வழங்க வேண்டும். கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் வழங்கப்படுவதைப் போல் பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டும். கால்நடைத் தீவனங்களை தரமானதாகவும், தேவையான அளவிலும் உற்பத்தி செய்து 50 சதவீத மானிய விலையில் வழங்க வேண்டும். விவசாயக் கடன்களைப் போல் கறவை மாடுகள் வாங்கவும், பராமரிக்கவும், வட்டியில்லா கடன் மானியத்துடன் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் வழங்கவேண்டும்.

காலதாமதமின்றி போனஸ் வழங்கிட வேண்டும். அனைத்து மாவட்டங்களிலும் பால் உற்பத்தியாளர்களை காப்பீட்டுத் திட்டத்தில் சேர்த்து, 50 சதவீத பிரீமிய தொகைகளை அரசே செலுத்த வேண்டும். தமிழகம் முழுவதும் கால்நடை மருத்துவமனைகளில் காலியாக உள்ள கால்நடை மருத்துவர் பணியிடங்களை

நிரப்புவதுடன், தேவையான அளவு கூடுதல் பணியிடங்களையும் உருவாக்க வேண்டும். கூடுதல் மருந்துகளை இருப்பில் வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, போடி வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில், பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநிலக் குழு உறுப்பினர் கே. செல்வராஜ் தலைமை வகித்தார். விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் டி. கண்ணன், தாலுகா செயலர் எஸ். செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தாலுகா செயலர் எஸ்.கே. பாண்டியன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

முன்னதாக, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் போடி தேவர் சிலையிலிருந்து ஊர்வலமாகச் சென்றனர்.

**பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்**

பசும் பால் லிட்டருக்கு ரூ.25-ம், எருமைப் பாலுக்கு ரூ.35-ம் கொள்முதல் விலை வழங்கக்கோரி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கம் சார்பில், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆவின் அலுவலகம் முன் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பால் உற்பத்தியாளர்களுக்கு 1 லிட்டர் பாலுக்கு ஊக்கத் தொகை ரூ.3 வழங்க வேண்டும். ஆவின் கால்நடை தீவனத்தை தரமானதாக, தேவையான அளவு உற்பத்தி செய்து 50 சதவீத மானிய விலையில் வழங்க வேண்டும்.

பால் உற்பத்தியாளர் ஆரம்ப கூட்டுறவு சங்கங்களிலுள்ள பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். கறவை மாடுகள் வாங்கவும், பராமரிக்கவும் வட்டியில்லாமல் மானியத்துடன் கடன் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு சி.முத்தையா தலைமை தாங்கினார். விவசாய சங்க மாநிலச் செயலாளர் ஏ.விஜயமுருகன், மாவட்டத் தலைவர் ஏ.குருசாமி, மாவட்டச்

செயலாளர் ஆர்.அண்ணாத்துரை, மாவட்டப் பொருளாளர் ஏ.மாரிமுத்து, துணைத் தலைவர் சி.மணிக்குமார் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தை விளக்கிப் பேசினர். ஐ.ஆர்.கணேசன் நன்றி கூறினார்.

**நீரின்றி கருகிவரும் நெற்பயிர்**

இருபோக சாகுபடிப் பகுதியில் கடைமடைப் பகுதிகளுக்கு பெரியாறு கால்வாயிலிருந்து முறையான தண்ணீர் விநியோகமில்லாததால், கதிர்வெளிவிடும் தருணத்தில் நெற்பயிர்கள் கருகி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதுகுறித்து திருக்காணை, வலச்சிகுளம், வெள்ளக்குப்பான், சிதம்பரம்பட்டி, தாமரைப்பட்டி, பூசாரிபட்டி, சிட்டம்பட்டி உள்ளிட்ட இருபோக சாகுபடிப் பகுதி விவசாயிகள் கூறியதாவது:

கடந்த சில ஆண்டுகளாக இருபோக சாகுபடிப் பகுதிகளில் பெரும்பாலும் ஒருபோகமே சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்தநிலையில் கடந்த ஆண்டு விவசாயம் முழுமையாக நடைபெறவில்லை. பெரியாறு நீர்பிடிப்பு பகுதியில் பெய்த தொடர்மழை காரணமாக அணைகளில் நீர்மட்டம் அதிகரித்து விவசாயத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

தற்போது மேலூர் உள்ளிட்ட ஒருபோக சாகுபடிப் பகுதிகளுக்கும் தண்ணீர்

திறக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியானது. அணைகளின் நீர் இருப்பைப் பொறுத்து இருபோக சாகுபடிப் பகுதியில் முறைப்பாசனம் அமல்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், முறையான நீர் நிர்வாகம் இல்லாததால் கடைமடைப் பகுதிகளுக்கு போதிய தண்ணீர் வந்து சேரவில்லை. பிரதான கால்வாய், கிளைக் கால்வாய்களின் ஆரம்பப் பகுதிகளில்

இரவு நேரத்தில் மடைகளைத் திறந்து அதிக அளவு தண்ணீரை திறந்துவிடுகிறனர். இதனால் கடைமடைப் பகுதி கால்வாய்களில் இரவில் தண்ணீர் வருவதில்லை.

பூலாம்பட்டி கால்வாய்க்கு தண்ணீர் திறக்கும் லஸ்கர் நியமிக்கப்படவில்லை.

வலச்சிகுளம் பகுதியில் நெற்பயிர்கள் கதிர்வெளிவிடும் நிலையில் உள்ளன. இந்நிலையில் இரண்டு நாள்களுக்குப் பிறகு செவ்வாய்க்கிழமைதான் தண்ணீர் வந்துள்ளது.

பெரும்பாலான விவசாயிகள் ஜேசிஎல், என்.எல்.ஆர். போன்ற சம்பா பயிர்களையே சாகுபடி செய்துள்ளனர். நாற்றுவிட்டதிலிருந்து தற்போது 60 முதல் 70 நாள்கள்

பயிராக உள்ளது. கதிர்பிடிக்கும் தருணத்தில் நிலத்தில் கூடுதலாக நீர் தேக்கவேண்டும். கடந்த சில தினங்களாக கடும் வெயில் நிலவுவதால் நிலத்தில் நீர் விரைவாக வற்றிவிடுகிறது. இதனால் கதிர்பிடிப்பது பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, இருபோக சாகுபடிப் பகுதியில் மழைபெய்யும்வரை தொடர்ந்து

நீர்விட வேண்டும். கால்வாய்களில் அனைத்து மடைகளையும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் இரவில் கண்காணித்து கடைமடைப் பகுதிகளுக்கு போதிய தண்ணீர் கிடைக்கச் செய்யவேண்டும். மழை பெய்யும்வரை கண்மாய்களுக்கு முறைவைத்து தண்ணீர் நிரப்புவதைத் தடுக்கவேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தினர்.

கருப்பாயூரணி, ஆண்டார்கொட்டாரம் பகுதி விவசாயிகளும் இப்பிரச்னை குறித்து மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுப்பணித் துறை பிரதான கால்வாய் கோட்ட கண்காணிப்புப் பொறியாளர் செல்வராஜ் கூறியதாவது: சாகுபடிப் பகுதியில் மழையில்லை. வெயிலும் அதிகரித்துள்ளதாலேயே தண்ணீர் பிரச்னை ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் கடைமடைப் பகுதிகளை நேரில் பார்வையிட்டு, கூடுதல் நீர் வழங்க முழுமையான நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

**கீழ்சாத்தமங்கலத்தில் கால்நடை மருத்துவ முகாம்**

வந்தவாசி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி நாட்டு நலப்பணி திட்டம் சார்பில் கீழ்சாத்தமங்கலம் கிராமத்தில் நடைபெற்று வரும் 7 தின சிறப்பு முகாமை ஒட்டி கால்நடை மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் 150-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்க மருந்து அளிக்கப்பட்டது. டாக்டர்கள் ஆர்.லில்லி இந்திரா, ராதிகா ஆகியோர் சிகிச்சை அளித்தனர். பள்ளித் தலைமை ஆசிரியர் பெ.சம்பத், திட்ட அலுவலர் வெ.ராம்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வேளாண்மைத் துறை சார்பில் மண், பாசன நீர் பரிசோதனை**

கலசப்பாக்கத்தை அடுத்த பழங்கோவில் கிராமத்தில் வேளாண்மைத் துறை சார்பில் விவசாய நிலங்களில் மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மைத் துறையின் நடமாடும் மண் பரிசோதனை நிலைய வாகனத்தின் மூலமாக பழங்கோவில் கிராமத்தில் முகாமிட்டு விவசாயிகளின் நிலங்களின் மண் மாதிரிகள் மற்றும் பாசன நீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் ஆய்வறிக்கையை உடனுக்குடன் வழங்கினர்.

இதில் 200 விவசாயிகள் பயன்பெற்றனர்.

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் நிலம் சார்ந்த அனைத்து வித அடிப்படை புள்ளி விவரங்களும் சேகரிக்கப்பட்டு கணினியில் பதிவு செய்யப்படுகிறது.

இந் நிகழ்ச்சியில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் செ.சுந்தரம், வட்டார தொழில்நுட்ப மேலாளர் விஜயன், நடமாடும் மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர்கள் சாந்தி, செல்வி சுகப்பிரியா, உதவி வேளாண் அலுவலர்கள் நாகராஜன்,பாண்டு,சுப்பிரமணியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**தருமபுரியில் செப். 27-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தருமபுரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற 27-ஆம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தருமபுரி மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெறும் வருகிற 27-ஆம் தேதி நடைபெறும் குறைதீர் கூட்டத்தில் விவசாயம் சார்ந்த குறைகள், கருத்துக்களை விவசாயிகள் தெரிவித்து பயன்பெறலாம் என்றார் அவர்.

**பருத்தி பண்ணைப் பள்ளி பயிற்சி முகாம்**

வெண்ணந்தூர் வட்டாரம், நாச்சிப்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் பருத்தி பண்ணைப் பள்ளி பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடத்தப்பட்டது.

இந்தக் கிராமத்தில் விவசாயி சீனிவாசன் என்பவரின் பருத்தி வயலில் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமின் தொடக்க விழாவில், வெண்ணந்தூர் அட்மா திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் கு.சீனிவாசன் வரவேற்றுப் பேசினார்.

நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய உழவியல் நிபுணர் அழகுதுரை பருத்தி பயிரில் கடைப்பிடிக்க வேண்டிய புதிய தொழில் நுட்பம் குறித்துப் பேசி பயிற்சியளித்தார். வேளாண்மை அலுவலர் வசுமதி, மண் பரிசோதனை அவசியம் மற்றும் மண் மாதிரி எடுத்தல் முறையை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். துணை வேளாண்மை அலுவலர் பசுபதி வேளாண்மைத் துறை திட்ட மானியங்களை விளக்கினார்.

வேளாண்மை உதவி அலுவலர்கள் ஆரோக்கியசாமி, அந்தோணிசாமி, சக்திவேல், கருப்புசாமி, மேகலா ஆகியோர் வயல் வெளியில் செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்.

இறுதியாக பருத்தி சாகுபடியில் சாதனை படைத்த விவசாயி க.சீனிவாசன் தனது விவசாய உத்திகளை எடுத்துக் கூறினார்.

அட்மா அலுவலர்கள் மா.ரமேஷ், தி.ஜமுனா ராணி ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

**பசுந்தீவன மேம்பாட்டுத் திட்டத்துக்கு ரூ.1.80 கோடி மானியம்**

மாநில பசுந்தீவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானியம் அளிக்க நாமக்கல் மாவட்டத்துக்கு ரூ.1.08 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், நிகழாண்டு 900 ஏக்கரில் பசுந்தீவனம் உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு பருவ மழை பொய்த்ததாலும், காவிரியில் எதிர்பார்த்த அளவு நீர் வெளியேற்றப்படாததாலும் கடந்தாண்டு தமிழகம் முழுவதும் அனைத்து வகை பயிர்களின் சாகுபடி வெகுவாகக் குறைந்தது.

இதில், கால்நடைகளுக்கான தீவனப் பயிர்களுக்கு ஏற்பட்ட கடும் பற்றாக்குறையால் தீவனத்தின் விலை மிகக் கடுமையாக உயர்ந்து வந்தது. அதேசமயம், பால் கொள்முதல் விலையில் மாற்றம் இல்லாததால் கால்நடை வளர்ப்போர் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். பல மாவட்டங்களில் கால்நடைகளை அடிமாட்டுக்கு விற்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இந்தப் பாதிப்புகளைத் தவிர்க்கவும், பால் உற்பத்தியைப் பெருக்கவும் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் மாநில பசுந்தீவன உற்பத்தித் திட்டத்தை ஏற்படுத்தி, தீவனப் பயிர் சாகுபடியை மேம்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் 0.25 ஏக்கரில் பல்லாண்டு தீவனப் பயிர் ரகங்களான கோ-3, கோ-4 பயிரிடும் விவசாயிகளுக்கு 100 சத மானியமாக ரூ.3000 வழங்கப்படுகிறது. இதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் 2012-13ஆம் நிதியாண்டில் மட்டும் 1,666 பயனாளிகளுக்கு 1.14 கோடி ரூபாய் மானியம் அளிக்கப்பட்டு, 950 ஏக்கரில் பசுந்தீனம் பயிரப்பட்டது. தற்போது அவை அறுவடை செய்யப்பட்டு கால்நடைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன்தொடர்ச்சியாக, நிகழாண்டு மானியம் அளிக்க ரூ.1.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக 900 ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் பி.சக்திவேல் தெரிவித்தார்.

இதுமட்டுமன்றி, வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் தீவன சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு 50 சத மானியமாக ரூ.6,800 மதிப்பில் தீவன சோள விதைகள் மானியம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் 1488

பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, தீவன சோள விதைகள் ஜூலை மாதம் வரை அளிக்கப்பட்டது.

தற்போது அறுவடை செய்யப்படும் அந்தத் தீவனங்கள் ஆவின் நிறுவனம் மூலம் பசுந்தீவனம் கிலோ ரூ.3 விலைக்கும், உலர்தீவனம் கிலோ ரூ.15க்கும் கொள்முதல் செய்யப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

**மக்காச்சோளத்தின் விலை உயர்வு:பரமத்தி விவசாயிகள் மகிழ்ச்சி**

மக்காச்சோளத்தின் விலை உயர்ந்துள்ளதால், பரமத்திவேலூர் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பரமத்தி வேலூர் வட்டம், சோழசிராமணி, மாரப்பம்பாளையம், அய்யம்பாளையம், சிறுநல்லிக்கோவில், ஜேடர்பாளையம், கபிலர்மலை, பொன்னேரிப்பட்டை உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் மக்காச்சோளம் பயிர் செய்யப்பட்டுள்ளது. மக்காச்சோளம் கரும்புப் பயிர் மற்றும் மஞ்சள் ஆகியவற்றில் ஊடுபயிராகவும், தனிப் பயிராகவும் பயிர் செய்யப்படுகிறது.

மக்காச்சோளம் மாவாக அரைக்கப்பட்டு கடைகளுக்கு அனுப்பப்படுகிறது. மேலும், தற்பொழுது அதிக அளவில் மக்காச்சோளம் கோழிப் பண்ணைகளுக்கு தீவனத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த மாதம் மக்காச்சோளம் டன் ஒன்று ரூ.14 ஆயிரத்திற்கு விற்பனையானது. தற்பொழுது உற்பத்தி குறைந்ததாலும், கோழிப் பண்ணைகளுக்கு தேவை அதிகரித்ததாலும் டன் ஒன்று ரூ.17 ஆயிரத்திற்கு விற்பனையாகிறது.

இந்த விலை உயர்வு காரணமாக மக்காச்சோளம் பயிர் செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**நாமக்கல்லில் வெப்பநிலை உயரக் கூடும்**

தென்மேற்குப் பருவ மழை காலம் முடிவுக்கு வருவதால், மேகமூட்டம் குறைந்து அதிகபட்ச வெப்ப அளவுகள் உயரக் கூடும் என்று, நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (செப்.25 முதல் 27-ஆம் தேதி வரை) வானம் லேசான மேகமூட்டத்துடன் மழையின்றி காணப்படும். காற்றின் திசை வேகம் மணிக்கு 6 கிமீ. வேகத்தில் மேற்கிலிருந்து வீசக் கூடும். வெப்ப நிலை குறைந்தபட்சம் 73.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 93.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 40 சதம் முதல் அதிகபட்சம் 78 சதம் வரை இருக்கும்.

கோழிப்

பண்ணையாளர்களுக்கு:

தென்மேற்குப் பருவ மழைக் காலம் முடிவுக்கு வரும் தருவாயில் உள்ளதால், மேகமூட்டம் குறைந்து அதிகபட்ச வெப்பம் உயர்ந்து காணப்படும். இதனால், தீவன மூலப் பொருள்களில் ஈரத்தன்மை குறையக்கூடும் என்பதுடன், பூஞ்சான நச்சின் தாக்கமும் குறைவாக இருக்கும். கோழிகளில் லேசான அயற்சி காணப்பட்டு அவற்றின் தீவன எடுப்பு இயல்பைவிடக் குறைந்தும் அல்லது இயல்பாகவும் காணப்படும்.

மழைக் காலங்களில் கோழிகளுக்கு ஏற்படும் வெள்ளைக் கழிச்சல் நோயைக் கட்டுப்படுத்த சின்ன சீரகம் -100 கிராம், கசகசா -5 கிராம், வெந்தயம் - 5 கிராம், மிளகு - 5 எண்ணிக்கை, மஞ்சள் தூள் - 5 கிராம், பெருங்காயம் - 5 கிராம் ஆகியவற்றை நன்கு வறுத்து இடித்துக் கொள்ள வேண்டும்.

தவிர, வெங்காயம் - 5 பல், பூண்டு - 5 பல் ஆகியவற்றை சேர்த்து நன்கு அரைத்து வறுத்த பொருள்களுடன் கலந்து அந்தக் கலவையை தீவனம் அல்லது அரிசிக் குருணையுடன் கலந்து 5 முதல் 10 கோழிகளுக்கு வாய் வழியாகக் கொடுத்து கழிச்சலைக் கட்டுப்படுத்தலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு:

மரவள்ளியில் மாவுப் பூச்சியின் தாக்குதல் பெருமளவில் காணப்படுவதால் இதைக் கட்டுப்படுத்த அசிரோபேகஸ் ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 100 என்ற அளவில்

விடலாம். ஒட்டுண்ணி உற்பத்தி செய்யும் முறையை நாமக்கல் வேளாண் விரிவாக்க நிலையத்தை தொடர்பு கொண்டு பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாட்டுக் கோழி வளர்ப்பு: செப்.30-இல் இலவசப் பயிற்சி**

கிருஷ்ணகிரியில் வருகிற 30-ஆம் தேதி நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து கிருஷ்ணகிரி கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத் தலைவர் அன்னல்வில்லி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி புதிய வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு பகுதி 2-இல் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் செயல்படுகிறது.

இங்கு வருகிற 30-ஆம் தேதி காலை 9 மணிக்கு நாட்டுக் கோழி வளர்ப்பு குறித்து இலவசப் பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

பங்கேற்க விருப்பமுள்ளவர்கல் ஆராய்ச்சி நிலைய தொலைபேசி எண் 04343-225105-இல் தொடர்பு கொண்டோ அல்லது நேரிலோ முன் பதிவு செய்து கொள்ளலாம்.

முதலில் பதிவு செய்யும் 25 பேர் மட்டுமே இந்தப் பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுவர் என்றார் அவர்.

**இலவச கால்நடை மருத்துவ முகாம்**

கிருஷ்ணகிரி மாவட்டம், நாகரகம்பட்டியில் இலவச கால்நடை மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பெரியார் ராமசாமி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி நாட்டு நலப் பணித் திட்ட முகாம் சார்பில், பேருஅள்ளி கிராமத்தில் நடைபெற்ற நாட்டு நலப் பணிகள் திட்ட முகாமில், நாகரகம்பட்டி அரசு கால்நடை மருத்துவர் ச.முரளி, கால்நடை பராமரிப்பு உதவியாளர் முருகன் ஆகியோர் கலந்து கொண்டு கோமாரி நோய் போன்ற பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளித்தனர்.

இந்த முகாமில், தலைமையாசிரியர் ராஜேந்திரன், பள்ளி ஆசிரியர்கள் அருள்மாறன், மருதாசலம், மூர்த்தி, சரவணன், சசிகுமார், மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். முகாம் ஏற்பாடுகளைத் திட்ட அலுவலர் பெருமன், உதவித் திட்ட அலுவலர் சங்கர் ஆகியோர் செய்தனர்.

**காவிரி டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு அதிகரிப்பு**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக மேட்டூர் அணையிலிருந்து, காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு 20 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

தற்போது, காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் நீரின் தேவை அதிகரித்ததால், செவ்வாய்கிழமை மாலை முதல் திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 22 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால், திங்கள்கிழமை மாலை நொடிக்கு 4,762 கன அடியாக இருந்த நீர்வரத்து, செவ்வாய்கிழமை மாலை நொடிக்கு 17,668 கன அடியாக அதிகரித்தது.

செவ்வாய்கிழமை, மாலை அணையின் நீர்மட்டம் 107.47 அடியாகவும், நீர் இருப்பு 74.86 டி.எம்.சி. யாகவும் இருந்தது.

**கால்நடைப் பாதுகாப்புத் திட்ட மருத்துவ முகாம்**

அரியலூர் அருகேயுள்ள மலத்தாங்குளத்தில் கால்நடை பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம் அண்மையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டக் கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் முதல்வரின் விலையில்லா கால்நடை வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கும்விதமாக இந்த முகாம் நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர் கருணாநிதி உலகநாதன் தலைமை வகித்து முகாமைத் தொடக்கி வைத்தார். அரியலூர் கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் சி. பத்மநாபன் முன்னிலை வகித்து சிறந்த கிடேரி கன்றுகளுக்குப் பரிசளித்தார்.

முகாமில் 684 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், 398 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி, 30 கால்நடைகளுக்கு செயற்கை கரூவூட்டல், 36 கால்நடைகளுக்கு சினைப் பரிசோதனை,13 கால்நடைகளுக்கு மலடு நீக்கச் சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

முகாமில் அரியலூர் கால்நடை உதவி மருத்துவர் ஆர். முருகேசன்,கீழப்பழூவூர் உதவி மருத்துவர் அ. செல்லப்பாண்டி,உதவியாளர்கள் சோ. ராஜேந்திரன், வரதராஜ், துரைசாமி, ஊராட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**மானியத்தில் விதைகள் விநியோகம்: ஆட்சியர்**

கரூர் மாவட்டத்தில் விதைகளை மானியத்தில் வாங்கிப் பயன் பெறலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூரில் மானாவாரி பயிர்களான சோளம், நிலக்கடலை, பயிறு வகைப்பயிர்கள் 1100 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. வாய்க்கால், கிணற்றுப் பாசனத்தைக் கொண்டு சம்பா பருவ நெல் சாகுபடிக்கு நாற்று நடப்பட்டு வளர்ச்சி நிலையில் பயிர்கள் உள்ளன. அக்டோபர் இறுதிக்குள் 16 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா பருவ நெல் சாகுபடிக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் சுமார் 9 ஆயிரத்து 500 ஏக்கர் திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களில் இருந்தும் இதுவரை 106 மெட்ரிக் டன் சான்று பெற்ற நெல் விதைகள், கிலோவுக்கு ரூ. 5 மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. திருந்திய நெல் சாகுபடி முறையை விவாயிகளிடம் ஊக்கப்படுத்திட 300 ஹெக்டேரில் செயல்விளக்கத் திடல்கள் அமைத்திட ஹெக்டேருக்கு ரூ. 3 ஆயிரம் மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன.

சிறுதானியப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கிட தீவிர சிறுதானியங்கள் அபிவிருத்தித் திட்டத்தில் 1000 ஹெக்டேருக்கு சி.எஸ்.எச்.14 என்ற உயர்ரகச் சோள விதைகள் மானியத்தில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பயிறு உற்பத்தியை பெருக்கிட பயிறு இயக்கத் திட்டத்தில், துவரை நாற்று விட்டு நடுவதற்காக 550 செயல்விளக்கத் திடல்கள் 50 சத மானியத்தில் வழங்கப்படுகின்றன. தற்போது ஒரு சில பகுதிகளில் நாற்றுகள் நடப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தில் 50 சத மானியத்தில் அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களிலும், பழக்கன்று, காய்கறி விதைகள் விநியோகிக்கப்படுகின்றன. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு பழக்கன்றுகள் 1 ஹெக்டேர் அளவிலும், காய்கறி விதைகள் 0.50 ஹெக்டேர் அளவிலும் மானிய விலையில் வழங்கப்படும். தேசிய நுண்ணீர் பாசனத் திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சத மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியத்திலும் சொட்டுநீர்ப் பாசன உபகரணங்கள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. சிறு விவசாயிகளுக்க 5 ஏக்கரும், குறு விவசாயிகளுக்கு 2.50 ஏக்கரும், இதர விவசாயிகளுக்கு 12.50 ஏக்கரிலும் மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனம் அமைத்துக் கொள்ளலாம்.

**பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்**

பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் நீடாமங்கலம் கூட்டுறவு பால் சங்க அலுவலகம் எதிரே செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒரு லிட்டர் பசும்பாலுக்கு ஐந்து ரூபாயும், எருமைப் பாலுக்கு 7 ரூபாயும் கொள்முதல் விலையை உயர்த்தி தர வேண்டும். மற்ற மாநிலங்கள் வழங்குவதுபோல், ஊக்கத் தொகையாக ஒரு லிட்டருக்கு 3 ரூபாய் வழங்க வேண்டும். தீவன விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். கறவை மாடுகள் வாங்க வட்டியில்லாமல் கடன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பி. ரத்தினம் தலைமை வகித்தார். வி. சிங்காரவேலு, ஆர்.ஜே.நடராஜன், பி.சி. ஜான், எஸ்.கே.சிவசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கரும்பு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் எஸ். தம்புசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் வி.எஸ். கலியபெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பேசினர்.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி செலுத்தும் பணி தொடக்கம்**

நாகை மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பு ஊசி செலுத்தும் பணி செவ்வாய்க்கிழமை (செப். 24) முதல் தொடங்கப்பட்டுள்ளது என ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு :

நாகை மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட இடத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது பசு மற்றும் எருமைகள் மற்றும் 4 மாதத்துக்கு மேற்பட்ட இளங்கன்றுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி செலுத்த வேண்டும். 21 நாள்களுக்கு இந்தப் பணி நடைபெறும் என்றார் அவர்.

**அதிக மகசூல் பெற மண் பரிசோதனை அவசியம்**

விவசாயிகள் அதிக மகசூல் பெற மண் பரிசோதனை செய்ய வேண்டும் என்றார் விதைப் பரிசோதனை நிலைய மூத்த வேளாண் அலுவலர் சீ. தெய்வீகன்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

வேளாண் தொழிலுக்கு முதன்மையான இடுபொருள் விதை. விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், உற்பத்தி அல்லது விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் விதையின் தரத்தை சோதித்துப் பயன்படுத்த வேண்டும். விதையின் தரம் என்பது ஈரப்பதம், முளைப்புத்திறன், விதைக் குவியலின் புறத்தூய்மை, பிற ரகங்களின் கலப்பு விகிதம் ஆகியவற்றால் நிர்ணயிக்கப்படுகிறது.

ஈரப்பதம் குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக இருந்தால் பூச்சி, பூஞ்சாண தாக்குதலுக்கு வழிவகுக்கும். பிற ரகங்களின் கலப்பு விகிதம் அதிகமாக இருந்தால், குறிப்பிட்ட ரகத்தின் இனத்தூய்மை பாதிக்கப்பட்டு விதை உற்பத்திக்கு பயன்படாது. இவற்றை அறிந்துகொள்ள, விவசாயிகள் மண் பரிசோதனை மேற்கொள்வது அவசியம்.

விதைப் பரிசோதனைக்கு மாதிரிகளை அனுப்பும்போது, குறைந்தபட்ச அளவாக நெல் 50 கிராம், மக்காச்சோளம், நிலக்கடலை 500 கிராம், சூரியகாந்தி, பருத்தி (பஞ்சு நீக்கியது), உளுந்து 100 கிராம், கம்பு, எள் 25 கிராம் என்ற அளவில் விதைப் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்ப வேண்டும்.

மாதிரிகள் அனுப்பும்போது மொத்த குவியலின் பிரதியாக இருக்க வேண்டும். பரிசோதனை முடிவுகள் விதை விற்பனையாளர்கள் அல்லது விவசாயிகளின் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். விதை மாதிரிகளின் விவரம், தேவைப்படும் பகுப்பாய்வுகள், முடிவுகள் அனுப்ப வேண்டிய முகவரியை குறிப்பிட்டு, ஒரு மாதிரிக்கு பரிசோதனைக் கட்டணமாக ரூ. 30 செலுத்தி, 95 மதனகோபாலபுரம், திருச்சி சாலை, பெரம்பலூர் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

எனவே பெரம்பலூர், அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விற்பனையாளர்கள், உற்பத்தியாளர்கள் விதைப் பரிசோதனை நிலையத்தின் சேவையைப் பயனபடுத்திக் கொள்ளலாம்.

## 44 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில், 44 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என ஆட்சியர் சி. நடராசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மாவட்டத்தில் ஏற்கெனவே 16 கிராமங்களில் நேரடி நெல் கொல்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது குறுவை நெல் அறுவடை நடைப்பெற்று வருவதால், தப்பளாம்புலியூர், வடகரை, நன்னிலம், கற்கத்தி,

மோட்டாத்தூர், வேலங்குடி, மருதுவாஞ்சேரி, கண்டிரமாணிக்கம், வடவேர், 31.பருத்தியூர், வடமட்டம், கடமங்குடி, கொட்டையூர், தெற்குபட்டம், ஊத்துக்காடு, ஆவூர், வலங்கைமான், கருவாகுறிச்சி, பரவாக்கோட்டை, தென்பரை, திருமக்கோட்டை, சித்தமல்லி, செருமங்கலம், மகாதேவப்பட்டினம், பேரையூர், எடமேலையூர், மூவர்கோட்டை, வடகரவயல், எடகீழையூர், எடஅன்னவாசல், மூவாநல்லூர், உள்ளிக்கோட்டை, தேவங்குடி, பெரம்பூர் நகர், காளாச்சேரி, அய்யம்பேட்டை, புரிவாநத்தம்.

முன்னவல்கோட்டை, சோனாப்பேட்டை, கீழப்பட்டு, ராயபுரம், பூவனூர், புள்ளவராயன்குடிகாடு ஆகிய ஊர்களில் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. மேலும் 44 கிராமங்களில் திங்கள்கிழமை முதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் மண்டல அலுவலகத்தை 04366-222542 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**உழவர் பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம் தொடக்கம்**

நாசரேத் கிராம நிர்வாக அலுவலகத்தில், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உறுப்பினராகப் பதிவு செய்யும் சிறப்பு முகாம் திங்கள்கிழமை தொடங்கியது.

திருச்செந்தூர் வட்டத்தில், உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உறுப்பினராகப் பதிவு செய்திட, திங்கள்கிழமை (செப்.23) முதல் வெள்ளிக்கிழமை (செப்.27) வரை சிறப்பு முகாம் அந்தந்த கிராம நிர்வாக அலுவலகங்களில் நடைபெறுகிறது.

நாசரேத்தில் நடைபெற்ற முகாமுக்கு ஆழ்வார்திருநகரி வருவாய் ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். கிராம நிர்வாக அலுவலர் அப்பனேஸ்வரி, கிராம உதவியாளர் கண்ணன், பேருராட்சி உறுப்பினர்கள் ராஜலிங்கம், ஜெயசிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கால்நடை தடுப்பூசி முகாம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி நோயை கட்டுப்படுத்த செப்டம்பர் மாத இறுதியில் முகாம் நடைபெறுகிறது.

இதற்காக 3.53 லட்சம் தடுப்பூசிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் சி. சமயமூர்த்தி வெளியிட்ட செய்திக் குறிப்பு: திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து கிராமங்களிலும் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்புத் திட்டத்தின் கீழ் 4-வது சுற்று தடுப்பூசிப் பணி நிறைவடைந்துள்ளது. 5-வது சுற்று தடுப்பூசிப் பணி இம்மாத இறுதியில் தொடங்கி 21 நாள்கள் நடைபெறும்.

இதற்காக 3.53 லட்சம் தடுப்பூசிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. எனவே, விவசாயிகள் பசு,எருமை மற்றும் 4 மாதத்திற்கு மேற்பட்ட இளங்கன்றுகளுக்கு தவறாது தடுப்பூசி போட்டுப் பயன்பெறலாம் என்றார் அவர்.

**பயிர் காப்பீட்டுப் பிரீமியம் ரூ.606 மட்டும்**

பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் நெல் பயிருக்கு ஏக்கருக்கு  விவசாயிகள் ரூ.606 மட்டும் பிரீமியம் செலுத்தினால் போதும் என வேளாண் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து வேளாண் உதவி இயக்குநர் ஜெயக்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கடலூர் வட்டாரத்தில் நிகழ் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் சார்பில் செயல்படுத்தப்படும் மாற்றி அமைக்கப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் சேர அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதில், ஒரு ஏக்கர் நெல் சாகுபடிக்குரிய ஈட்டுறுதித் தொகையான ரூ.10,100-க்கு 15 சத பிரீமியம் செலுத்த நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் 9 சத பிரீமியத் தொகையை தமிழக அரசு மானியமாக வழங்குகிறது. மீதமுள்ள 6 சத பிரீமியத் தொகையான ரூ.606-ஐ விவசாயிகள் செலுத்த வேண்டும்.

இதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் கடலூர், தூக்கணாம்பாக்கம், கீழ்குமாரமங்கலம் வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கும்.  பூர்த்தி

செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் உரிய சிட்டா மற்றும் அடங்கல், பிரீமியம் தொகைக்கான வங்கி வரைவோலை ஆகியவற்றை இணைத்து வழங்க வேண்டும்.

கடலூர் வட்டார தொடர்பு அலுவலராக, சிதம்பரம் யுனைடெட் இந்தியா கிளை மேலாளர் கிள்ளிவளவன் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது செல்போன் எண் 9442229238 . மேலும் விவரங்களுக்கு கடலூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் அணுகலாம்.

**பசும்பால் லிட்டருக்கு ரூ.25: உற்பத்தியாளர்கள் கோரிக்கை**

பசும்பால் ஒரு லிட்டருக்கு ரூ.25 என விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கக் கோரிக்கை விளக்க சிறப்புப் பேரவைக் கூட்டம் ஆலம்பூண்டியில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு ஆலம்பூண்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத் தலைவர் டி.ஆர். குண்டு ரெட்டியார் தலைமை வகித்தார். துணைத் தலைவர் ஆர்.ஏழுமலை வரவேற்றார்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்க மாநில பொதுச் செயலர் கே.முகம்மதுஅலி விளக்க உரையற்றினார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணைத் தலைவர் கோ.மாதவன், கரும்பு விவசாயிகள் சங்க செயலர் ஆர்.சங்கர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கூட்டத்தில் தமிழக அரசுக்கு வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகள்: பசும்பால் ஒரு லிட்டருக்கு ரூ.5 வீதமும், எருமைப்பாலுக்கு ரூ.7-ம் உயர்த்தி முறையே ரூ.25, ரூ.35 என வழங்கவேண்டும். மற்ற மாநிலங்களில் உள்ளதுபோல் பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லிட்டர் பாலுக்கு ஊக்கத் தொகை என ரூ.3 வழங்க வேண்டும்.

ஆவின் கால்நடை தீவனத்தைத் தரமானதாகவும், தேவையான அளவுக்கும் உற்பத்தி செய்திட வேண்டும். ஆவி0ன் கால்நடை தீவனத்தையும், ஐ.பி.எல் தீவனத்தையும் 50 சதவீதம் மானிய விலையில் வழங்கிட வேண்டும். பால் உற்பத்தியாளர்கள் ஆரம்பக் கூட்டுறவு சங்கங்களிலுள்ள பணியாளர்கள் அனைவரையும் பணிநிரந்தரம் செய்து ஊதிய உயர்வு வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. இயக்குநர் என்.தமிழரசி நன்றி கூறினார்.


தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.09.2013**

**விவசாய மலர்**

**சோளப்பயிரை தாக்கும் பூச்சிகள்**




**1. சோள தண்டு துளைப்பான்:** இந்த தண்டு துளைப்பான் இளநாற்றுகளையும் வளர்ந்த சோளப்பயிரினையும் தாக்கி சேதப்படுத்தும். இந்த தண்டு துளைப்பான் தாய் பூச்சி சோள இலைகளின் அடிப்பகுதியில் நடுநரம்பின் பக்கத்தில் ஒன்றின் மேல் ஒன்ற எகிறினால்போல் குவியல்களாக முட்டைகளை இடும். முட்டையிட்ட ஏழு நாட்களில் வெளிவரும் இளம் புழுக்கள் சோள இலைகளை சுரண்டி உண்டு, பின்னர் தண்டை துளைத்து உட்சென்று குருத்துப்பாகத்தின் திசுக் களை உண்டு சேதப்படுத்துவதால் குருத்து துண்டிக்கப்பட்டு நாற்று மடிந்துவிடும். வளர்ந்த சோளப்பயிரை தாக்கும்போது புதிதாக வெளிவரும் இலை விரியும்போது, நடுநரம்பின் இருபுறமும் சமதூரத்தில் துளைகள் காணப்படும். தாக்கப்பட்ட சோளப்பயிரிலிருந்து தோன்றும் கதிர் பதராகிவிடும்.

வளர்ச்சி அடைந்த புழுக்கள் பழுப்புநிற தலையை கொண்டும், முன்மார்பு கண்டத்தில் பழுப்புநிற கேடயம் போனற கெட்டியான பகுதியை கொண்டும், உடலில் கருமைநிற புள்ளிகளை கொண் டும் மஞ்சள் கலந்த நிறத்தில்

காணப்படும். தாய்பூச்சி மஞ்சள் கலந்த புழுப்பு நிறத்திலும், வைக்கோல் நிறம் கொண்ட முன் இறக்கைகளின் விளிம்பில் இரண்டு வரிசை கரும்புள்ளிகளை கொண்டும் பின் இறக்கைகள் வெண்மை நிறமாக இருக்கும்.

**2. சோளக்குருத்து ஈ:** இந்த குருத்து ஈயின் புழுக்கள் ஒரு மாத வயதுக்குட்பட்ட இளம் சோளப்பயிர்களை மட்டுமே சேதப்படுத்தும். குருத்து ஈ வெண்மையான, நீண்ட குழாய் வடிவிலான முட்டைகளை இலையின் அடிப்பரப்பில் அல்லது இலை உறைகளில் இடும். முட்டையிலிருந்து 1-2 நாட்களில் வெளிவரும் புழுக்கள் இலையின் மேற்பரப்பிற்கு வந்து பின்னர் இலை உரைக்கும் தண்டிற்கும் இடையே துளைத்து குருத்து பகுதியை அடைந்து திசுக் களை உண்டு சேதப்படுத்துவதால் குருத்து துண்டிக்கப்பட்டும் அழுகியும் தாக்கப்பட்ட சோளப்பயிர் மடிந்துவிடும். குருத்து ஈ மிகச்சிறியதாகவும் வெண்மை கலந்த சாம்பல் நிறத்தில் இருக்கும்.

**3. சோளக் கதிர் ஈ:** கதிர் ஈயின் பெண் ஈக்கள் முட்டைகளை பூக்களில் தன்னந்தனியாக சொருகிவிடும். முட்டையிலிருந்து வரும் புழுக்கள் பால்பிடிக்கும் தருணத்தில் தானியத்தை துளைத்து உட்சென்ற சோள உணவினை உண்டு சேதம் விளைவிக்கின்றன. தாக்கப்பட்ட சோள தானியங்களை அழுத்தினால் ஒருவித சிவப்பு நிற திரவம் வெளிவரும். தாக்கப்பட்ட தானிய மணி சிறுத்து, சுருங்கி பதராகிவிடுவதுடன் பதரான தானியங்களில் புழு துளைத்த துவாரம் காணப்படும். புழுக்கள் இளம் சிவப்பு நிறமாகவும், கால்களற்றும் தென்படும். ஈக்கள் ஆரஞ்சு நிறமாகவும், இளஞ்சிவப்பு நிற வயிற்று பாகத்தையும் ஒளி புகக்கூடிய, மெல்லிய இறக்கைகளை கொண்டும் கொசுவைப்போல் சிறியதாக நலிந்து காணப்படும்.

**4. சோளக்கதிர் நாவாய் பூச்சி:** பெண் பூச்சி இளம் நீல நிறமுள்ள, சுருட்டு போல் நீளமான முட்டைகளை குவியலாக பூக்களினுள் சொருகிவிடும். முட்டையிலிருந்து 5-6 நாட்களில் வளர்ச்சியடைந்த பூச்சிகள் போன்றும் இறக்கையில்லாமலும், மஞ்சள் கலந்த பச்சை நிறத்துடன் இளம் பூச்சிகள் வெளிவரும். அவைகள் வளரும்போது 4-5 முறை தோல் உரித்து இறக்கைகள் கொண்டவைகளாகவும், வெளிர் பச்சை நிறத்திலும் குச்சிபோல் நீல நிறமாகவும், நீண்ட கால்களைக் கொண்டும் வளர்ந்த பூச்சிகள் காணப்படும். இளம் பூச்சிகளும் வளர்ந்த பூச்சிகளும் பால்பிடிக்கும் நிலையிலுள்ள சோள தானியங்களை தாக்கி உள்ளிருக்கும் சாற்றை உறிஞ்சி சோள மணிகளை சுருக்கி பதராக்கிவிடும். ஒரு கதிரிலேயே இளம் பூச்சிகளும் வளர்ந்த பூச்சிகளும் காணப்படும்.

**5. பூச்சி கட்டுப்பாடு:** பூச்சி தாக்குதல் அறிகுறிகள் மற்றும் சோளப்பயிர்களில் காணப்படும் பூச்சியின் முட்டைகள், புழுக்கள், அந்தி பூச்சிகள் போன்றவைகளை

காண நேர்ந்தால் பொருளாதார ஆரம்ப சேதநிலையினை எட்டியவுடன் விவசாய விஞ்ஞானிகளை நேரில் சந்தித்து அவரது சிபாரிசின் பிரகாரம் உழவியல் முறை, மருத்துவமுறை, உயிரியல் முறை போன்ற பூச்சிக்கட்டுப்பாட்டு முறைகளை மேற்கொண்டு பூச்சி, புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். பூச்சி பீடைகளின் தாக்குதல் பொருளாதார சேதநிலையினை அடைந்தால் பொருளாதார ரீதியாக இழப்பையும், நஷ்டத்தையும் தவிர்க்க முடியாது. மேற்கோள்: பயிர்களை தாக்கும் பூச்சிகளும் பீடைகளும் - ஹெச் லிவின் தேவசகாயம்.

**டாக்டர் கே.கிருஷ்ணமூர்த்தி,**

**95859 50088.**

**சின்ன சின்ன செய்திகள்**



**முருங்கை பழ ஈ:** செடிமுருங்கைசாகுபடியில் முருங்கை காய்களைத் தாக்கும் முக்கிய பூச்சி இது. ட்ரோசொபிலா என்ற சிறிய வகையைச் சேர்ந்த இந்த பழ ஈக்கள் முருங்கை பிஞ்சுகளைத் தாக்கி சேதம் விளைவிக்கின்றன. பிஞ்சுகள் வளர ஆரம்பிக்கும்போது மெல்லிய தோல்களில் முட்டையிடுகின்றன. இரண்டு மூன்று நாட்களில் வெளிவரும் கால்கள் இல்லாத வெண்மை நிற புழுக்கள் திசுக்களைச் சாப்பிடும். பிஞ்சின் நுனிப்பகுதியில் இருந்து தொடங்கும். தாக்கிய பகுதிகளில் இருந்து காபி நிறத்தில் பிசின் போன்ற திரவம் வடிய தொடங்கி, நுனிப்பகுதியை மூடிவிடும். பிஞ்சுகள் சுருங்கி, வெம்பி, அழுகி காய்ந்துவிடும்.

காய்களில் பிளவுகளிலிருந்து துர்நாற்றம் வீசும்.7 முதல் 10 நாட்கள் வரை வளர்ந்த புழுக்கள் காய்களில் இருந்து நிலத்தில் விழுந்து கூட்டுப்புழுக்களாக மாறி, அடுத்து

காய்க்கும் பருவம் வரை நிலத்தில் உறக்க நிலையில் இருக்கும். கூட்டுப்புழுக்கள் தாய் ஈக்களாக மாறி மீண்டும் சேதத்தை விளைவித்து வாழ்க்கை சுழற்சியைத் தொடங்கும்.
கட்டுப்பாடு: பாதிக்கப்பட்ட பிஞ்சுகளை முழுவதுமாக சேக ரித்து மண்ணில் புதைத்தோ அல்லது நன்கு தீயிட்டோ எரித்துவிட வேண்டும். மண்ணில் கூட்டுப்புழுக்களை வெளிக்கொண்டுவர 2-3 முறை உழவு செய்து காயவிட வேண்டும்.
காய்களின்மீது ஈக்கள் அமர்ந்து முட்டையிடுவதைத் தடுக்க 3 சதம் வேப்ப எண்ணெய்க் கரைசல் தெளிக்க வேண்டும். முருங்கை பூக்கும் தருணத்தில் மேங்க்ளர் (சாக் தயாரிப்பு) 30 மிலி / 10 லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். பிஞ்சு வளர ஆரம்பித்து 20 முதல் 30 நாட்களில் மறுமுறை "மேங்க் ளர்' அதே அளவு தெளிக்க வேண்டும். அடுத்து 15 நாட்கள் இடைவெளிவிட்டு மீண்டும் மேங்க்ளர் தெளிக்க வேண்டும்.
50 சதவீதம் காய்கள் உருவான நிலையில் அதாவது இரண்டாவது முறை மேங்க்ளர் பயன்படுத்துவதற்கு பதில் நிம்பிசிடின் 0.03 சதம் அளவில் பயன்படுத்த வேண்டும். மேலும் நீம் சீட் கொணல் எக்ஸ்ட்ராக்ட் (என்எஸ்கேஇ) 2 லிட்டர்/மரம் ஊற்றினால், பழ ஈக்களின் தாக்குதலை குறைக்கலாம்.

**தூதுவளை:** ஒரு கொடி இனத்தைச் சேர்ந்தது. செடி முழுவதும் கூரிய முட்கள் காணப்படும். சிறிதாக உடைந்த இலைகள் மாற்றடுக்கில் அமைந்திருக்கும். பூக்கள் இலைக்கோணல்களில் தனியாக மலரும். பூக்கள் கருநீலத்திலும், பழங்கள் உருண்ட வடிவில் அடர்சிவப்பு நிறத்திலும் காணப்படும்.
தூதுவளையின் இலை, பூ, பழங்கள், வேர்கள் பல்வேறு நோய்களைக் குணப்படுத்த பயன்படுகின்றன. இலைகள் சளி, இருமல், எலும்புருக்கி, ஆஸ்துமா ஆகிய நோய்களைக் குணப்படுத்த பயன்படுகிறது. பூக்கள் உடல் உரமேற்றியும், ஞாபக சக்தியைத் தூண்டவும், இருமலைப் போக்கவும் பயன்படுகிறது. பழங்கள் இருதயக் கோளாறுகள், மலச்சிக்கல், சுவாசக்கோளாறுகள் ஆகியவற்றை குணப்படுத்தவும், ஆஸ்துமாவை நீக்கவும் பயன்படுகிறது.
தூதுவளை விதைகள் மூலம் பயிர்பெருக்கம் செய்யப்படுகிறது. விதைகளை நாற்றங்காலில் விதைத்து, நல்ல வாளிப்பான நாற்றுக்களைப் பிடுங்கி நடவு செய்ய வேண்டும். விதைகள் விதைத்த ஒரு வாரத்தில் முளைக்கும். தூதுவளை அனைத்து

வகையான மண்ணில் வளர்ந்தபோதிலும், நல்ல வளர்ச்சிக்கு மணற்பாங்கான செம்மண் நிலமே ஏற்றது.
செடிகளை 1 மீ து 1மீ இடைவெளியில் நிலத்தில் நீர் பாய்ச்சி நடவு செய்ய வேண்டும். ஒரு எக்டருக்கு 25 டன் தொழு உரம், தழை, மணி, சாம்பல் சத்துக்களை 70:40:20 கிலோ என்ற அளவில் உரமாக இடவேண்டும். நடவு செய்த 60 நாட்களுக்குப் பின்னர் இலைகளை அறுவடை செய்ய வேண்டும்.
(தகவல்: முனைவர் இல.நளினா, முனைவர் ஆர்.எம்.விஜயகுமார், மருந்து மற்றும் மணமூட்டும் பயிர்கள் துறை, த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்- 641003. போன்: 0422-661 1365)

**மொந்தன் ரக கறிவாழை -** சாகுபடி பற்றி அனுபவங்களை திருவண்ணாமலை மாவட்டம் பண்ணைக்கொல்லை கிராமத்தைச் சேர்ந்த அண்ணாமலை தெரிவிப்பது: அனைத்து பட்டங்களிலும் சாகுபடி செய்யலாம். நிலத்தில் வடிகால் வசதி அவசியம். நிலத்தை நன்கு உழுது மண்ணைப் பொலபொலப்பாக மாற்றி, செடிக்கு செடி, வரிசைக்கு வரிசை ஏழரை அடி இடைவெளியில் ஒன்றரை அடி ஆழம், அகலம் குழிகள் எடுத்து 1 வாரம் வரை ஆறப்போட்டு 5 கிலோ தொழு உரத்துடன் மேல் மண்ணைக்கலந்து குழியை நிரப்ப வேண்டும். பின்னர் பாசனம் செய்து, 2 மாத வயதுள்ள கன்றுகளை குழிகளில் நடவு செய்ய வேண்டும்.
நடவு செய்த 3ம் நாள் உயிர்த்தண்ணீரும் பின் வாரம் ஒரு தண்ணீரும் கொடுத்தால் போதுமானது. 30ம் நாள் இடைஉழவு செய்து, களை நீக்கம் செய்து, 90ம் நாள் 1 டன் மண்புழு உரத்துடன் 50 கிலோ காம்ப்ளக்ஸ், 25 கிலோ பொட்டாஷ், 25 கிலோ வேப்பம் புண்ணாக்கு ஆகியவற்றை கலந்து மரத்துக்கு ஐந்தரை கிலோ வீதம் வைத்து மண் அணைத்து விட வேண்டும். நடவு செய்த 7 மாதத்தில் குலை தள்ள ஆரம்பிக்கும். 9-12 மாதங்களில் அறுவடை செய்யலாம். 25 சென்டுக்கு செலவு போக நிகர லாபம் ரூ.18,000 கிடைத்துள்ளது. தொடர்புக்கு: அண்ணாமலை, 89730 93432)

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**சூரிய ஒளி பம்பு மூலம் வெற்றி அடைந்த விவசாயி**



**தேனி மாவட்டம், சின்னமனூரில், பொன் நகரம் என்ற ஊரில் எனக்கு தென்னந்தோப்பு உள்ளது. எனது பெயர் பீ.கே.வி.நாராயணன். எனது தென்னந்தோப்பில் நீர்வரத்து இருந்தும் மின் பற்றாக்குறையால் எனது விவசாயம் பாதிக்கப்பட்டது. பின்னர் சூரிய ஒளி சக்தி மூலம் பம்புசெட்டை இயக்க முடிவு செய்தேன்.**
**பின்னர் பம்புசெட்டை இயக்கக்கூடிய பல நிறுவனங்களோடு தொடர்புகொண்டேன். குடிமங்கலத்தைச் சேர்ந்த சோலார் கேர் நிறுவனத்தார் வழங்கக்கூடிய ஐந்து வருட பராமரிப்பு சேவை என்னை மிகவும் கவர்ந்தது. பின்னர் அவர்களிடம் எனது தேவையான 7.5எச்.பி பம்பு செட்டிற்கு சோலார் கருவி அமைத்து தருமாறு கேட்டுக்கொண்டேன். எனது தோட்டத்தை ஆய்வுசெய்த பின் அவர்களின் பரிந்துரைப்படி தேவையான நீர் பாசனத்திற்கு சோலார் தகடுகள் மூலம் மின்சாரம் தயாரித்து தினமும் 8 - 10 மணி நேரம் வரை இயங்கக்கூடிய வகையில் நவீன தொழில்நுட்பத்துடன் தீர்வு அளிக்கப்பட்டது. தற்போது எனது தோட்டத்திற்கான நீர் பாசனத்தேவை முழுவதுமாக சோலார் கருவி மூலம் தீர்த்து வைக்கப்பட்டது. ஆதலால் எனது தோட்டத்திற்கு பெற்றிருந்த மின் இணைப்பையும் துண்டித்து விட்டேன். எனக்கு தேவையான மின்சக்தியை இயற்கைக்கு எந்த அழிவும் இல்லாமல் நானே உற்பத்தி செய்து கொள்ளும்படி நல்ல தீர்வை சோலார் நிறுவனம் வழங்கியுள்ளது. (தகவல்: சிவக்குமார், 94422 68142)**

**-**கே.சத்தியபிரபா, உடுமலை.

பார்சொட்டு நீர் பாசன முறைக்கு வரவேற்பு :அரசு மானியம் வழங்க எதிர்பார்ப்பு

பல்லடம்:குறைவான தண்ணீரில், அதிக மகசூல் பெறக்கூடிய வகையில், பார்சொட்டு நீர் பாசன முறையை, பல்லடம் வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள்

பின்பற்றி வருகின்றனர். இப்பாசன முறைக்கு, விவசாயி கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.பல்லடம் பகுதியில் சித்தம்பலம், சித்தம்பலம்புதூர், ஜல்லிப்பட்டி, வாவிபாளையம், குள்ளம்பாளையம், மந்திரிபாளையம், ஆலூத்துப்பாளையம், அய்யம்பாளையம் உட்பட பல இடங்களில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், இப்பகுதி விவசாயிகள் சீராக விவசாயம் செய்ய முடியாமல் தவித்தனர். பல விவசாயிகள், சொட்டு நீர் பாசனம் அமைத்து, தென்னை, காய்கறி பயிர்களை காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.தற்போது வெங்காயம், காய்கறி, பூக்கள் உள்ளிட்ட அனைத்து வகை பயிர்களுக்கும் போதிய அளவு தண்ணீரை பாய்ச்சக்கூடிய, நவீன பார்சொட்டு நீர் முறையை, சித்தம்பலம்புதூர் , வாவிபாளையம், குண்டடம், ஆலூத்துப்பாளையம் உள்ளிட்ட பல பகுதியை சேர்ந்த விவசாயிகள் கையாளத் துவங்கியுள்ளனர்.வரப்புகளுக்கு இடையே வாய்க்கால்போல் அமைக்கப்படும், ஒவ்வொரு பாத்திக்கும் முன் பகுதியில் அமைக்கப்பட்டு இருக்கும் பார்சொட்டு நீர் மூலம் பாசனம் செய்யப்படுகிறது. தண்ணீர் விரையம் ஆகாமல் செல்வதுடன், கிணற்று மோட்டாரை இயக்க ஒருவர் மட்டும் இருந்தால் போதுமானது. சீராக செல்லும் தண்ணீர், பயிர்களின் வேரில் நன்றாக இறங்குவதுடன், மறுமுறை தண்ணீர் பாய்ச்சும் வரை, ஈரம் குறையாமல் இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.விவசாயி ஒருவர் கூறியதாவது:வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை, விவசாய கூலி உயர்வு காரணமாக பார்சொட்டு நீர் பாசனம் மூலம் விவசாய பணி செய்கிறேன். இம்முறையில் அனைத்து பயிர்களுக்கும் தண்ணீர் பாய்ச்சலாம். சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு பாய்ச்சக் கூடிய தண்ணீரை, பார்சொட்டு நீர் பாசனம் மூலம் இரண்டரை ஏக்கருக்கு பாய்ச்சலாம். இரண்டு மணி நேரத்தில் ஒரு ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்சலாம். சொட்டுநீர் பாசன முறையில் சில நாட்களிலேயே சொட்டு நீர் குழாயில் உப்பு படிந்து அடைப்பு ஏற்பட்டு விடும். இதனால், அடிக்கடி குழாய்களை பராமரிக்க வேண்டியுள்ளது. பார்சொட்டு நீர்பாசனத்தில் தண்ணீர் பீய்ச்சி அடிப்பதால், உப்பு படிவதில்லை.குறைந்த அளவு தண்ணீர், கூலி

தொழிலாளர் தேவையின்மை, இரண்டு மணி நேரத்தில் ஒரு ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்சுதல் போன்ற காரணங்களால், பார்சொட்டு நீர் பாசனம் விவசாயிகள் மத்தியில் வரவேற்பை பெற்று வருகிறது. சொட்டு நீர் பாசனம் அமைக்க, மானியம் வழங்குவதுபோல், இத்திட்டத்துக்கும் விவசாயிகளுக்கு மானியம் வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## நாட்டின் நெல் உற்பத்தி :9.23 கோடி டன்னாக குறையும்

புதுடில்லி:நாட்டின் நெல் உற்பத்தி, நடப்பு 2013 – 14ம் ஆண்டின், கரீப் பருவத்தில், 9.23 கோடி டன்னாக சரிவடையும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே பருவத்தில், 9.27 கோடி டன்னாக அதிகரித்து காணப்பட்டது என, வேளாண் துறை ஆணையர் ஜே.எஸ். சாந்து தெரிவித்தார்.அதேசமயம், மதிப்பீட்டு பருவத்தில், நாட்டின் ஒட்டு மொத்த உணவு தானிய உற்பத்தி, 12.82 கோடி டன்னிலிருந்து, 12.93 கோடி டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டு உள்ளது.மழை பற்றாக்குறையால், பீகார், ஜார்க்கண்ட் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில், நெல் உற்பத்தி குறையும் என, கணக்கிடப்பட்டு உள்ளது. நடப்பாண்டின் கரீப் பருவத்தில், மக்காச்சோளம் உற்பத்தி, 1.77 கோடி டன்னாக அதிகரிக்கும் என, கணக்கிடப்பட்டு உள்ளது. இது, கடந்தாண்டின் இதே பருவத்தில், 1.60 கோடி டன்னாக இருந்தது. மேலும், பருப்பு வகைகள் உற்பத்தியும், 59.10 லட்சம் டன்னிலிருந்து, 60.10 லட்சம் டன்னாக உயரும் என, சாந்து மேலும் தெரிவித்தார்.

## வெங்காயம்விலை சரிவு

ஆர்.கே.பேட்டை:வெங்காயத்தின் விலை, நேற்று, கிலோ, 25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.ஆர்.கே.பேட்டை வார சந்தையில், இரண்டு வாரங்களாக, கிலோ, 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட வெங்காயம், நேற்று, 25 ரூபாய்க்கு விற்பனை ஆனது. சந்தைக்கு வந்த பொதுமக்கள், வெங்காயத்தை ஆர்வமுடன்

வாங்கிச் சென்றனர்.இதுகுறித்து, வியாபாரிகள் கூறியதாவது:வேலுார் சந்தையில் இருந்து கொள்முதல் செய்து, ஆர்.கே.பேட்டை, பொதட்டூர்பேட்டை உள்ளிட்ட வார சந்தையில் விற்பனை செய்கிறோம். தற்போது வேலுார் சந்தைக்கு, வெங்காய வரத்து அதிகரித்துள்ளது. இதையடுத்து, விலை இறங்குமுகமாக உள்ளது. அடுத்த சில வாரங்களில், வெங்காயம், கிலோ, 10 ரூபாய் அளவிற்கு குறைய வாய்ப்பு உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விலை அதிகரிக்கும் என விவசாயிகள் காத்திருப்பு : அறுவடை செய்த மஞ்சள் "ஸ்டாக்'வைப்பு

கள்ளக்குறிச்சி:விலை உயரும் என்ற நம்பிக்கையில் அறுவடை செய்த மஞ்சளை விவசாயிகள் அதிகளவில் இருப்பு வைத்து காத்துள்ளனர். கடந்த 2 ஆண்டாக கடும் விலை வீழ்ச்சியால் மாற்று பயிருக்கு தாவும் விவசாயிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கச்சிராயபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 1,800 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டது. ஒரு குவிண்டால் ரூ.14 ஆயிரம் முதல் ரூ.17 ஆயிரம் வரை விற்பனையானது.வாரச்சந்தைவிவசாயிகளுக்கு லாபம் கிடைத்ததால் மஞ்சள் சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டினர். விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் கடந்த 2011ம் ஆண்டு அரசும் மானியம் வழங்கி ஊக்குவித்தது. சுற்று வட்டார பகுதியில் மஞ்சள் சாகுபடியின் பரப்பு அதிகரித்ததால் கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மஞ்சள் வார சந்தையும் துவக்கப்பட்டது. இங்கு பல மாவட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பலர் மஞ்சள் கொள்முதல் செய்தனர்.ஏமாற்றம்நல்ல லாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மஞ்சள் பயிரிட்ட விவசாயிகளுக்கு ஏமாற்றம் மிஞ்சியது. ஒரு குவிண்டால் மஞ்சள் பயிருக்கு உற்பத்தி செலவு ரூ.6 ஆயிரம் ஆகிறது. கிழங்கு அழுகாமலும், இளம்பிள்ளை நோய் தாக்காமல் இருக்க மருந்து அடித்து காப்பாற்றி அறுவடை செய்கின்றனர். ஒரு ஏக்கருக்கு 10 முதல் 15 குவிண்டால் மஞ்சள் கிடைக்கிறது.இங்கு அறுவடை செய்யும் மஞ்சள் ஈரோடு, சேலம்,

நாமகிரிபேட்டை, ஆத்தூர் பகுதிகளில் உள்ள நிறுவனத்தினர், மொத்த வியாபாரிகள் நேரடியாக வந்து கொள்முதல் செய்து எடுத்து சென்றனர். இதனால் மஞ்சள் சாகுபடி விவசாயிகளுக்கு போக்குவரத்து செலவு மிச்சமானது.
விலை வீழ்ச்சிகடந்த இரண்டு ஆண்டுகளாக மஞ்சள் விலை முற்றிலும் வீழ்ச்சி அடைந் துள்ளதால் விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத் தியுள்ளது. ரூ.5 ஆயிரம் முதல் ரூ.6 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது. பயிர் செய்ய ஆகும் உற்பத்தி செலவை ஈடு செய்யாததால் விவசாயிகளிடம் சோகத்தை ஏற்படுத்தியது. மேலும் கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுவு விற்பனை சங்கத்தில் ஆண்டு தோறும் மஞ்சள் சீசனின் போது நடத்தப்பட்ட மஞ்சள் வார சந்தையும் கைவிடப்பட்டது.
ஸ்டாக்விவசாயிகள் மஞ்சள் விலை உயரும் என்ற நம்பிக்கையில் கடந்த ஜனவரி மாதம் அறுவடை செய்த மஞ்சளை விற்காமல் வீட்டிலேயே பாதுகாப்பாக இருப்பு வைத்துள்ளனர். ரூ.8 ஆயிரம் கிடைத்தால் கூட விற்பனை செய்து விடுவோம் என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியில் தற்போது 50 டன்னிற்கும் மேலாக அறுவடை செய்த மஞ்சளை விவசாயிகள் இருப்பு வைத்துள்ளனர்.மேலும் ஆண்டுதோறும் மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்து வருவதால் கடந்த இரண்டு ஆண்டுகளாக மஞ்சள் சாகுபடியின் பரப்பு குறைந்து 700 ஏக்கர் அளவில் மட்டுமே தற்போது பயிரிடப்பட்டுள்ளது. மரவள்ளி, ஹோலியாஸ் போன்ற மாற்று பயிருக்கு விவசாயிகள் தாவி வருகின்றனர்.

## மாடுகளுக்கு கோமாரி நோய்: கட்டுப்படுத்த நடவடிக்கை தேவை

விழுப்புரம்:விழுப்புரம் மகாராஜபுரத்தில் கால்நடைகளுக்கு பரவும் கோமாரி நோயைக் கட்டுப்படுத்த தடுப்பூசி முகாம்களை கால்நடை பராமரிப்புத் துறை நடத்த வேண்டும்.திண்டிவனம் பகுதியில் கடந்த மாதம் மாடுகளுக்கு ஆந்த்ராக்ஸ் நோய் தாக்கியதில் சில மாடுகள் இறந்தன. மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை மூலம் கிராமங்களில் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இருப்பினும் பல கிராமங்களில் கோமாரி நோய் வேகமாக பரவி வருகின்றன.விழுப்புரம் மகாராஜபுரம், மாரியம்மன் கோவில் அருகே உள்ள இந்திரா, செல்வி ஆகியோரது பசு மாடுகள் கோமாரி நோயால் பாதித்துள்ளன. மாடுகளின் வாயிலிருந்து

தொடர்ந்து நுரை தள்ளியபடி நிற்கின்றன. சில பசுக்களுக்கு மடி கோமாரியும் ஏற்பட்டுள்ளது. இந்நோய் கண்ட கறவை மாடுகளிலிருந்து கிடைக்கும் பால் மஞ்சள் நிறத்திலும், கெட்டியாகவும் காணப்படுகின்றன.பொதுவாக மழைக் காலங்கள் துவங்கும் போது, ஆண்டு தோறும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஏற்படுகின்றன. ஆனால் இந்நோயிற்கான அறிகுறிகள் வெளிப்பட்டு, கால்நடைகள் பாதித்த பிறகே , மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. இவற்றை தவிர்த்து மழைக்காலம் துவங்கும் நேரத்திலேயே அனைத்து கிராமங்களிலும் மருத்துவ முகாம்கள் நடத்தி, கோமாரி நோய் தடுப்பூசிகள் போட வேண்டும்.

### மரவள்ளி கொள்முதல் நிலையம்சங்கராபுரம் விவசாயிகள் கோரிக்கை

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் மரவள்ளி கிழங்கு கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.சங்கராபுரம் பகுதியில் பொய்குனம், குளத்தூர், நெடுமானூர், அரசம்பட்டு, லக்கினாய்கன்பட்டி, சோழம்பட்டு உள்ளிட்ட பல கிராமங்களில் அதிகளவில் மரவள்ளி கிழங்கு பயிரிடப்பட்டு வருகின்றது. முள்வாடி, ரோஸ், குங்குமரோஸ் ஆகிய ரகங்கள் அதிகளவில் பயிர் செய்யப்படுகின்றன.தற்போது மரவள்ளியில் அமோக விளைச்சல் ஏற்பட்டு ஏக்கருக்கு 150 முதல் 200 மூட்டைகள் வரை மகசூல் கிடைக்கிறது. ஒரு டன் 3500 ருபாய் முதல் 4000 ரூபாய் வரை கொள்முதல் செய்யப் படுகிறது. அறுவடை செய்த மரவள்ளி கிழங்குகளை லாரிகள் மூலம் தலைவாசல், ஆத்தூர், சேலம் ஆகிய பகுதிகளுக்கு கொண்டுச் சென்று விவசாயிகள் விற்பனை செய்கின்றனர்.

இதனால் போக்குவரத்து செலவு, வீண் அலைச்சல்

ஏற்படுகிறது.இப்பிரச்னைகளை தீர்க்கும் வகையில், சங்கராபுரத்தில் மரவள்ளி கிழங்கு நேரடி கொள்முதல் நிலையத்தை அமைத்திட வேண்டுமென அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை அனுப்பி உள்ளனர்.

### உழவர் மாத விழாவில் ரூ.6 கோடி கடனுதவி

உளுந்தூர்பேட்டை:உளுந்தூர்பேட்டை சாரதா ஆசிரமத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சார்பில் உழவர் மாத விழாவையொட்டி விவசாயிகளுக்கு கடனுதவி

வழங்கும் விழா நடந்தது.புதுச்சேரி மண்டல மேலாளர் கணேஷ் தலைமை தாங்கினார். சாரதா வித்யாலயா பள்ளி முதல்வர் யத்தீஸ்வரி ஆத்மவிகாச பிரியா அம்பா சிறப்புரையாற்றினார். சென்னை பொது மேலாளர் ராதா கிருஷ்ண பிரசாத் கலந்து கொண்டு 203 பயனாளிகளுக்கு ரூ. 6.03 கோடி மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார். உளுந்தூர்பேட்டை வங்கி மேலாளர் பாலகிருஷ்ணன் வரவேற்றார். புதுச்சேரி விவசாய பிரிவு மேலாளர் சீனிவாசன், முதுநிலை காசாளர் முனுசாமி, உளுந்தூர்பேட்டை விவசாய பிரிவு மேலாளர் அசோக்குமார், உதவி மேலாளர்கள் பெஞ்சுமின், விஜயகுமார், குந்தன்குமார், துணை மேலாளர்கள் மோகன், மனோஜ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மஞ்சள் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதி விவசாயிகள் மஞ்சள் சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.சங்கராபுரம் அடுத்த பொய்குனம், அரசம்பட்டு, நெடுமானூர், காட்டுகொட்டாய், ஆலத்தூர் ஆகிய கிராமங்களில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.கடந்த ஆண்டு 100 கிலோ எடையுள்ள மஞ்சள் மூட்டை 8000 முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. இதனால் வரும் பொங்கல் பண்டிகையின் போது அறுவடை செய்யும் வகையில் விவசாயிகள் மஞ்சள் சாகுபடிசெய்துள்ளனர்.

## சாகுபடி பரப்பு அதிகரிப்பால் நீர் பற்றாக்குறை மேட்டூர் நீர்திறப்பு 22,000 கனஅடியாக உயர்வு

மேட்டூர்: டெல்டா மாவட்ட கடைமடை பகுதிகளில் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளதால், பாசனத்துக்கான நீர்தேவை அதிகரித்துள்ளது. இதனால், மேட்டூர் அணை நீர்திறப்பு நேற்று வினாடிக்கு, 22,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி பாதித்தது. தாமத நீர்திறப்பால் பாசன கால்வாய் கரையோரங்களில் மட்டுமே விவசாயிகள் சம்பா நெல் சாகுபடி செய்தனர். கடைமடை பகுதியில், கடந்த ஆண்டு குறுவை, சம்பா சாகுபடி பாதித்ததால் விவசாயிகள் விரக்தியடைந்தனர்.

நீர்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்ததால் நடப்பாண்டு

மேட்டூர் அணை நிரம்பியது. கடந்த ஆக.,2ல் டெல்டா பாசனத்துக்கு நீர்திறக்கப்பட்டது. அணை நிரம்பியதால், இறுதி வரை பாசனத்துக்கு நீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், கடந்த ஆண்டு சாகுபடி செய்யாத விவசாயிகள் கூட, நடப்பாண்டு டெல்டா கடைமடை பகுதிகளில் நெல் சாகுபடி செய்துள்ளனர். நடப்பாண்டு பாசனத்துக்கான நீர்தேவை அதிகரித்துள்ள நிலையில், அணையில் இருந்து, 18,000 கனஅடி நீர் திறந்ததால், கடைமடை பகுதிக்கு முழுமையாக தண்ணீர் சென்றடையவில்லை. கடைமடை விவசாயிகள் கோரிக்கை ஏற்று, வினாடிக்கு, 18,000 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்திறப்பு கடந்த, 22ம் தேதி, 20,000 கனஅடியாகவும், நேற்று மாலை, 4 மணிக்கு, 22,000 கனஅடியாகவும் அதிகரிக்கப்பட்டது.

கடும் வறட்சி காலத்தில் மட்டுமே டெல்டா பாசனத்துக்கு அதிகபட்சமாக வினாடிக்கு, 24,000 கனஅடி நீர் திறக்கப்படும். ஆனால், நடப்பாண்டு வடகிழக்கு பருவமழை சீஸனில் பாசனத்துக்கு வினாடிக்கு, 22,000 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்தால், 4,762 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று, 17,668 கனஅடியாக அதிகரித்தது. எனினும், நீர்திறப்பு அதிகமாக இருப்பதால் கடந்த, 15ம் தேதி, 114.090 அடியாக இருந்த நீர்மட்டம் நேற்று, 107.470 அடியாக குறைந்தது. கடந்த, பத்து நாளில் நீர்மட்டம், 7 அடி குறைந்துள்ளது.

கூடுதல் நீர் திறப்பால் அணை, சுரங்க மின்நிலையங்களில், ஒரு யூனிட் பழுது காரணமாக, 250க்கு பதிலாக, 200 மெகாவாட், ஏழு கதவணை மின் நிலையங்களில், 210 மெகாவாட் என, நீர்மின் நிலையங்களில் முழு அளவில் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

## தோட்டக்கலை, மலைப்பயிர் துறையின் சொட்டு நீர்ப்பாசன விழிப்புணர்வு முகாம்

மோகனூர்: மோகனூர் யூனியன், ஆரியூர் பஞ்சாயத்தில், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், மாவட்ட அளவிலான சொட்டுநீர் பாசனம் குறித்த விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சொட்டு பாசன விழிப்புணர்வு முகாம் நடந்தது.

மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். தோட்டக்கலை துணை இயக்குனர் கதிரவன் வரவேற்றார். வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் இளையப்பன் பேசும் போது, ""நடப்பாண்டில் சிறு குறு விவசாயிகள், 100 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்துக் கொள்ளலாம். பெரிய விவசாயிகள், ஐந்து ஹெக்டேர் வரை, 75 சதவீதம் மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்து பயன்பெறலாம்', என்றார்.

சொட்டுநீர் பாசனம் மூலம் ஒவ்வொரு பயிரின் வளர்ச்சிப் பருவத்துக்கேற்ப நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். அதிக அளவில் நீர்ப்பாசனம் செய்யும் போது, பயிர் நீரை எடுத்துக்கொள்ளாமல், பயிரின் வளர்ச்சி உறக்க நிலையில் இருக்கும். எனவே, விவசாயிகள், நீர்ப்பாசனம் உரிய அளவில் செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

முகாமில், சொட்டு நீர்ப்பாசனம் குறித்த கருத்துக்காட்சி அரங்குகள், பல்வேறு நிறுவனங்களால் அமைக்கப்பட்டிருந்தது. இந்த அரங்குகளை, விவசாயிகள் பார்வையிட்டு, சொட்டுநீர் பாசனம் சம்பந்தப்பட்ட சந்தேகங்களுக்கு நிவர்த்தி செய்து கொண்டனர்.

சொட்டுநீர் பாசனம் பற்றிய செயல்விளக்கம், சக்திவேல் என்ற விவசாயி வயலில் செய்து காண்பிக்கப்பட்டது. முகாமில், சுற்று வட்டாரத்தை சேர்ந்த, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். தோட்டக்கலை உதவி இயக்குனர் அசோகன், அலுவலர்கள், இதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

## தண்ணீர் திறந்துவிட விவசாயிகள் எதிர்பார்ப்பு! அணைகளுக்கு நீர்வரத்து எதிரொலி

பழநி:கொடைக்கானலில் மழைபெய்ததால், பழநி அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. பயறு,நெல் நடவு பணிகளை மேற்கொண்டுள்ள விவசாயிகள், அணையிலிருந்து நேரடி விவசாய பாசனத்திற்கு தண்ணீர் திறக்கவேண்டும், என எதிர்பார்க்கின்றனர்.

கொடைக்கானல் மலைப்பகுதி பெய்யும் மழையால், வரதமாநதி, பாலாறு-பொருந்தலாறு, குதிரையாறு போன்ற அணைகளுக்கு நீர்வரத்துள்ளது.
நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.
தற்போது குடிநீர் தேவைக்கு
மட்டும் தண்ணீர் திறந்துவிடப்
படுகிறது. இந்நிலையில் விவசாய பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட
விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.
வரதமாநதி பாப்பன் வாய்க்கால் நேரடி பாசன விவசாய சங்க
செயலாளர் டி. திருநாவுக்கரசு
கூறுகையில்,""அணைகளுக்கு தண்ணீர் வரத்துள்ளது. பல ஏக்கர் பரப்பளவில்,கொய்யா, மக்காசோளம், நெல்,கரும்பு, வாழை போன்றவை விளைவிக்கப்படுகிறது.
வழக்கமாக அக்டோபர் முதல் வாரத்தில் தண்ணீர் திறந்துவிடுவார்கள்.
கடந்தாண்டு, குளங்கள், வாய்க்கால் வேலைகாரணமாக திறக்கவில்லை.
தற்போது தண்ணீர் உள்ளதால் நேரடி விவசாயபாசனத்திற்கு, முறைப்படி அக்டோபர் முதல் வாரத்தில் தண்ணீர் திறந்துவிட,  அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

## கிடப்பில் விவசாய கிணறுகள் தூர்வாரும் திட்டம்

திண்டுக்கல்: திண்டுக்கல் மாவட்டத்தில், ஆயுதங்களுக்கு தடை விதிக்கப்பட்டதால், பாசன கிணறுகள் தூர்வாரும் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.
விவசாயிகளின் கோரிக்கையால், கிணறுகளை தேசிய ஊரக வேலையுறுதி

திட்டத்தில், தூர்வார கடந்த ஆண்டு அரசு உத்தரவிட்டது. மேலும், தூர்வாருதற்கு, ஆயுதங்களை பயன்படுத்தக் கூடாது, என, கூறப்பட்டதால், திட்டம் முடங்கியது. விவசாயிகள் சங்க திண்டுக்கல் மாவட்டத் தலைவர் லட்சுமணபெருமாள் கூறுகையில், ""திண்டுக்கல் மாவட்டத்தில், 91,488 பாசன கிணறுகள் உள்ளன. அவற்றை பல ஆண்டுகளாக தூர்வாராததால், போதிய தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே, ஆயுதங்கள் பயன்படுத்தி கிணறுகளை தூர் வாருவதற்கு, அரசு அனுமதிக்க வேண்டும்," என்றார்.

## மரவள்ளி கிழங்கில் வளம் கொழிக்கும் விவசாயிகள்

முல்லைப் பெரியாறு, வைகையாறு, கொட்டகுடியாறு, சுருளியாறு, மஞ்சளாறு, சோத்துப்பாறை, என வளம் கொழிக்கும் மாவட்டம் தேனி. நெல், கரும்பு, வாழை ஆற்று படுகைகளிலும், இறவை பாசன நிலங்களிலும் சாகுபடி செய்கின்றனர். பணப்பயிர்களுக்கு இணையாக, வருவாய் ஈட்டுவதாக மரவள்ளி கிழங்கு சாகுபடி தேனி மாவட்டத்தில் நடக்கிறது. பத்து மாதங்களுக்கு ஒரு முறை பலன் தரும் மரவள்ளி கிழங்கு, உத்தமபாளையம் தாலுகாவின் மலையடிவார கிராமங்களிலும், ஆண்டிபட்டி, போடி தாலுகாவில் வறட்சியான பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது. தோட்ட தொழிலாளர்கள் பற்றாக்குறை, விவசாயிகளுக்கு பெரும் தலைவலியாக உள்ளது. மற்ற பயிர்களை விட, மரவள்ளி கிழங்கு சாகுபடிக்கு, குறைவான தொழிலாளர்களே தேவை. நடவு, களையெடுப்பு, உரமிடுதல், அறுவடை போன்ற காலங்களில், குறைந்த எண்ணிக்கை பணியாளர்களை வைத்து வேலை நடக்கிறது. குறைந்த அளவு நீர் பாய்ச்சினால் போதும். அவ்வப்போது பெய்யும் மழையால் மரவள்ளி செடி பசுமை மாறாமல் இருக்கும்.

மரவள்ளியின் அனைத்து பகுதியும் "பணம்'

மரவள்ளி கிழங்கின் வேரில் இருந்து, இலை வரை அனைத்தும் பணம். செடியில் உள்ள இலை(கால்நடைகளுக்கு பசுந் தீவனம்), காய்ந்த குச்சி(மறு நடவுக்கு), கிழங்கு, கிழங்கு கழிவு(மாட்டு தீவன மாவுக்கு அரைக்க) என அனைத்து

பாகங்களும் பணமாகிறது. இதனால் விவசாயிகள் பணம் காய்க்கும் மரமாகவே, மரவள்ளியை பார்க்கின்றனர். மரவள்ளி பயிரிட்ட விவசாயிகளுக்கு, கிடைக்கும் லாபம் கரும்பு விவசாயிகளை திரும்பி பார்க்க வைத்துள்ளது. நீர் பற்றாக்குறையான நில உரிமையாளர்கள் மரவள்ளி சாகுபடிக்கு மாறி வருகின்றனர்.

விவசாயிகளின் "புதையல்'

ஆண்டு முழுவதும் பாடுபட்டும், எவ்வித பலனுமில்லை என்று அலுத்து கொண்ட விவசாயிகளுக்கு, வரபிரசாதமாக அமைந்துள்ளது மரவள்ளி கிழங்கு சாகுபடி. நல்ல பண்பட்ட நிலத்தில், ஒரு ஏக்கர் மரவள்ளி பயிரிட 30 முதல் 35 ஆயிரம் வரை செலவாகிறது.

ஏக்கருக்கு 10 முதல் 12 டன் மகசூல் கிடைக்கிறது. ஒரு டன் 14 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனையாகிறது. ஏக்கருக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரத்திற்கு மேல் வருவாய் கிடைக்கிறது. பல ஆண்டுகளாக கடன் பட்டிருந்த விவசாயிகள் மரவள்ளி பயிரிட்டு நல்ல லாபம் பார்த்துள்ளனர். பெரும்பாலான விவசாயிகள் புதிய வீடு, வாகனம், என "ஷெட்டில்' ஆகியுள்ளனர்.

பாரம்பரிய உணவு

*பி.லோகமணி, டி.மூனாண்டிபட்டி, கப்பை சிப்ஸ் உற்பத்தியாளர்:

கேரள மக்களின் பாரம்பரிய உணவாக மரவள்ளி கிழங்கு உள்ளது. இடுக்கி மாவட்டம் மிக அருகில் இருப்பதால், மொத்த வியாபாரிகள் பச்சை கிழங்கை வாங்க வருகின்றனர். விவசாயிகளுக்கும் நல்ல விலை கிடைக்கிறது. கிழங்கு தோண்டி எடுப்பதற்கு வியாபாரிகளே கூலி கொடுப்பதால், விவசாயிகளுக்கு எவ்வித செலவும் இல்லை.

கிழங்கை ஆண்டு முழுவதும் பயன்படுத்த, "வாட்டு கப்பை'யாக தயாரிக்கிறோம். கிழங்கை அவித்து, தோலுரித்து சிறு, சிறு துண்டாக வெட்டி காய வைக்கிறோம். நன்கு காய்ந்த கிழங்கு ஆறு மாதம் வரை கெட்டு போகாமல் இருக்கும். சிப்ஸாக உள்ள கிழங்கை, முதல் நாள் ஊர வைத்து, மறுநாள் அவித்து உணவாக பயன் படுத்துகின்றனர். பச்சை கிழங்கை விட, ஊர வைத்த சிப்ஸ் கிழங்கு நல்ல

ருசியுடன் இருக்கும்.
ஒரு கிலோ சிப்ஸ் தயாரிக்க மூன்று கிலோ கிழங்கு தேவைப்படுகிறது. சிப்ஸ் ஒரு கிலோ 60 ரூபாய்க்கு விற்பனையாவதால், கிழங்கை மதிப்பு கூட்டி சிப்ஸாக விற்கும் பணியில் விவசாயிகள் ஈடு படுகின்றனர்.

டன் ரூ.14 ஆயிரம்

*ர.தங்கப்பாண்டியன், கிழங்கு மொத்த வியாபாரி:

கடந்த ஆண்டு ஒரு டன் கிழங்கு 7 ஆயிரம் ரூபாயாக இருந்தது. நடப்பு சீசனில் ஒரு டன் கிழங்கு 14 ஆயிரம் ரூபாய்க்கும் மேல் விற்பனையாகிறது. சேலம் பகுதி ஜவ்வரிசி மில்காரர்கள் தேனி மாவட்ட கிழங்கை வாங்கி செல்கின்றனர். மாவு மில்காரர்கள் கிழங்கில் எவ்வித கழிவுமின்றி வாங்குகின்றனர். வெளி நாடுகளிலில் இருந்து
"ஸ்டார்ச்' இறக்குமதியானதால், கிழங்கு விலையின்றி இருந்தது.

சேலம், ஆத்தூர் பகுதியில் மரவள்ளி பயிரிடும் பரப்பு மழையின்மை காரணமாக குறைக்கப்பட்டது. தேனி மாவட்டத்தில், இறவை பாசன நிலங்களில் மரவள்ளி நல்ல விளைச்சல் உள்ளது. கேரளாவில் மரவள்ளி கிழங்கின் தேவை அதிகமிருப்பதால் விலை உயர்ந்து கொண்டே செல்கிறது. கூலி தொழிலாளர்கள் பிரச்னையில்லாததால் மரவள்ளி சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது.

பெண்களுக்கு வேலைவாய்ப்பு

*பொ.ரமேஷ், சிப்ஸ் தயாரிப்பு சிறு முதலீட்டாளர்:

ஒரு டன் மரவள்ளி கிழங்கு 14,500 வரை வாங்குகிறோம். வீட்டில் உள்ள பெண்களுக்கு பகுதி நேர வேலையாக, கிழங்கு அவிப்பது, வெட்டுவது, காய வைப்பது போன்ற பணிகள் வழங்கப்படுகிறது. ஒரு டன் கிழங்கிற்கு இவ்வளவு என கூலி வழங்கப்படுகிறது. நல்ல வெயில் நேரத்தில் விரைவாக சிப்ஸ் தயாரிக்க முடியும். மழை சீசனில் காய வைப்பது பெரும் பிரச்னையாக உள்ளது. சிப்ஸ் கிலோ 60ரூபாய்க்கு கேரளா மொத்த வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரு டன் சிப்ஸ் உற்பத்தி செய்தால், செலவு போக 5 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. வீட்டில் உள்ள பெண்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. மொத்தமாக பணம் கிடைக்குது  *க.ரமேஷ், டி.புதுக்கோட்டை,

மரவள்ளி கிழங்கு சாகுபடியாளர்:
காய்கறி பயிரிட்டால் கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. ஆண்டுக்கு ஒரு முறை அறுவடை என்றாலும், மரவள்ளி சாகுபடியால் மொத்தமாக பணம் கையில் கிடைக்குது. கிழங்கு தோண்டுவது, லாரியில் ஏற்றுவது போன்ற அனைத்து செலவுகளும் வியாபாரிகள் பார்த்து கொள்வதால், விவசாயிகளுக்கு எவ்வித சிரமமும் இல்லை.
கிழங்கிற்கு நல்ல விலை கிடைப்பதால், மரவள்ளி நடவு செய்ய விவ சாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

## உரக்கடைகளின் உரிமம் ரத்து விவசாயத்துறை எச்சரிக்கை

கம்பம்:குறிப்பிட்ட காலத்திற்குள் உரிமத்தை புதுப்பிக்காமல் உள்ள உரம் மற்றும் பூச்சி மருந்து கடைகளின் உரிமம் நிரந்தரமாக ரத்து செய்யப்படும், என விவசாயத்துறையினர் எச்சரித்துள்ளனர். 10 க்கும் மேற்பட்ட கடைகளின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.
மாவட்டத்தில் நெல், பருத்தி, வாழை, திராட்சை, தென்னை, காய்கறிகள் சாகுபடி அதிகளவில் நடக்கிறது. தோட்டக்கலை மாவட்டம் என்ற பெயரையும், நெல் சாகுபடியில் குறிப்பிட்ட இடத்தையும் பெற்றுள்ளது. விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்துகள் மற்றும் இடுபொருள்கள் விற்பனை செய்ய, 650 உரம் மற்றும் பூச்சி மருந்து கடைகள் உரிமம் பெற்றுள்ளன.
இந்த கடைகள் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை விவசாயத்துறையிடம், தங்களின் உரிமத்தை புதுப்பித்துக் கொள்ள வேண்டும். குறிப்பிட்ட தேதியில் புதுப்பிக்கத் தவறினால், ஒரு மாதம் வரை அபராத கட்டணம் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில உரிமம் ரத்து செய்யப்படும். மாவட்டத்தில் உள்ள 650 கடைகளில் பெரும்பாலான கடைகள், உரிமத்தை புதுப்பிக்கத் தவறியதாக உள்ளன.
புதுப்பிக்கும் தேதி முடிந்து மாதங்கள் பல கடந்தும், அதை கண்டுகொள்ளாமல் உள்ளனர். இது தொடர்பாக பரவலாக புகார்கள் வந்ததன் பேரில், மாவட்ட இணை இயக்குனர் சுந்தரம் ஆலோசனையின் பேரில், மாவட்ட தரக்கட்டுப்பாட்டு

அதிகாரி ஜெயப்பாண்டியன் தலைமையிலான குழுவினர், கடைகளில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது பெரும்பாலான கடைகள் உரிமத்தை புதுப்பிக்காமல் இருப்பது கண்டறியப்பட்டது.

10 க்கும் மேற்பட்ட கடைகளின் உரிமங்களை ரத்து செய்து உத்தரவிட்டனர்.

தனியார் கடைகள் என்றில்லாமல், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளும், உரிமங்களை புதுப்பிக்காமல் உள்ளன. தங்களின் உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை செய்யும் உரிமங்களை புதுப்பிக்க தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளும் முன்வர வேண்டும். இல்லையென்றால், உரிமங்கள் ரத்து செய்யப்படும், என இணை இயக்குனர் தெரிவித்தார்.

## கார் நெல் பயிரில் குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்தும் முறை

தென்காசி : கடையம் வட்டாரத்தில் கார் பருவத்தில் பரவலாக சாகுபடி செய்துள்ள அம்பை 16 ரகத்தில் ஆங்காங்கே குருத்துப்பூச்சி தாக்குதல் தென்படுகிறது. குருத்துப்புச்சி தாக்குதலினால் அதிக அளவில் மகசூல் இழப்பு ஏற்படும். குருத்துப்பூச்சியின் தாய் அந்துப்பூச்சிகள் நெல் பயிரின் இலைகளின் நுனியில் குவியல் குவியலாக முட்டையிடும். இம்முட்டைகள் பழுப்பு மற்றும் மஞ்சள் நிற ரோமங்களால் மூடப்பட்டிருக்கும். இம்முட்டையிலிருந்து வெளிவரும் இளம் மஞ்சள் நிற புழுக்கள் நெல் பயிரின் தூர்களை தாக்கி சேதம் எற்படுத்தும். நெல் பயிரின் சிம்புகள் பாதிக்கப்பட்டவுடன் அழுகி காய்ந்துவிடும். கையினால் இழுத்தவுடன் வந்துவிடும். பொதி பருவத்தில் தாக்குதல் ஏற்பட்டால் வெண்கதிர் வரும். எனவே கடையம் வட்டார விவசாய பெருமக்கள் கீழ்க்கண்ட ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை தற்போது தவறாது கார் நெல் சாகுபடியில் கடைபிடிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கார்நெல் சாகுபடியான வயல் வரப்புகளில் களைகள் இன்றி சுத்தமாக வைத்திருக்கவேண்டும். குருத்துப்பூச்சியின் தாய் அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். ஒரு ஏக்கரில் 5 இனக்கவர்ச்சி பொறிகளை வைத்து ஆண் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழித்து குருத்துப்பூச்சியின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தவேண்டும். ஒரு ஏக்கரில் 5 விளக்கு பொறிகளை வைத்து தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கவேண்டும். வேப்பம் புண்ணாக்கு கரைசல் 5

சதம் அல்லது வேப்பம் எண்ணெய் மருந்தை தெளித்து குருத்துப்பூச்சிகள் முட்டை இடுவதை தவிர்க்கலாம்.முட்டைகளை அழிக்கக்கூடிய நன்மை செய்யும் ஒட்டுண்ணியான ட்ரைகோகிராம்மா ஜப்பானிக்கம் பயன்படுத்த வேண்டும். நடவு வயலில் இளம் குருத்துகள் பாதிப்பு 10சதவீதத்திற்கு மேல் காணப்பட்டால் கீழ்க்கண்ட மருந்துகளில் ஏதேனும் ஒன்றுடன் டேங்கிற்கு 10 மி.லி., ஒட்டும் திரவம் சேர்த்து தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். புரொப்பன்னாபாஸ் 2 மில்லி நீர்(400மிலி/ஏக்கர்) அல்லது கோரஜன் 60மில்லி/ஏக்கர், கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 1.5 கிராம்/லிட்டர் நீர் (300கிராம்/ஏக்கர்). நெல் நடவு வயலில் ஒரே நேரத்தில் தழைச்சத்து உரங்களை அதிகளவில் இடக்கூடாது. மூன்று நான்கு தடவைகளாக பிரித்து இடவேண்டும். எக்காரணத்தை கொண்டும் ஒரு தடவையில் ஏக்கருக்கு 25 கிலோவிற்கு மேல் யூரியா உரமிடக்கூடாது. அடியுரமாக 17 கிலோ பொட்டாஷ் மற்றும் இரண்டாவது மேலுரமிடும்போது (நடவு செய்த 30வது நாள்) 17 கிலோ பொட்டாஷ் உரத்தினை ஒரு ஏக்கருக்கு இடவேண்டும். திருந்திய நெல் சாகுபடி முறையை கடைபிடித்தால் குருத்துப்பூச்சி தாக்குதல் குறையும். ஒன்றுக்கு மேற்பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை கலந்து தெளிக்ககூடாது. சிபாரிசு செய்யப்படும் அளவு பூச்சிகொல்லி மருந்துகளை தெளிக்க வேண்டும். அடிக்கடி தேவையில்லாமல் பூச்சி மருந்து தெளிக்கக்கூடாது. பொருளாதார சேதநிலை அறிந்து தெளிக்க வேண்டும். நடவு செய்த உடன் 1 ஏக்கரில் 5 எண்கள் குருத்துப்பூச்சி இனக்கவர்ச்சி பொறிகளை வைத்தால் நெல் பயிரில் பூச்சி மருந்து அடிக்காமல் குருத்துப்பூச்சியை கட்டுப்படுத்தலாம். இனக்கவர்ச்சி பொறிகள் தேவைப்படும் விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையம் கடையம் மற்றும் ஆழ்வார்குறிச்சியை தொடர்பு கொள்வும். எனவே கடையம் வட்டார விவசாய பெருமக்கள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடித்து நடப்பு கார் பருவத்தில் குருத்துப்பூச்சி தாக்குதலை தவிர்த்து அதிக மகசூல் பெற கடையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கிருஷ்ணபிள்ளை கேட்டுக்கொள்கிறார்.

## வாய்க்காலில் தண்ணீர் திறக்க லஞ்சம்?திருச்சி மாவட்ட விவசாயிகள் அதிர்ச்சி

திருச்சி: கிளைவாய்க்கால்களில் தண்ணீர் திறக்க பொதுப்பணித்துறை அலுவலர்கள் லஞ்சம் கேட்பதாக திருச்சி மாவட்ட விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.

கரூர் மாவட்டம் மாயனூரில் பிரியும் புதிய மேட்டு கட்டளை வாய்க்கால் மூலம், கரூர், திருச்சி, தஞ்சை மாவட்டத்தில் 25,000 ஏக்கர் நிலம் பாசன வசதிப்பெறுகிறது. தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டி வரை இந்த வாய்க்கால் பாசனம் உள்ளது.

மேட்டுக்கட்டளை வாய்க்காலிலிருந்து திருச்சி மாவட்டத்தில் தாயனூர் - துப்பாக்கித்தொழிற்சாலை வரை, 18 கிளைவாய்க்கால்கள் உள்ளன. திருச்சி, நத்தமாடிப்பட்டியில், 400 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் பாசன வசதிபெறுகின்றன.

நடப்பாண்டு காவிரியில் பாசனத்துக்கு தேவையான தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், பெரும்பாலான பகுதிகளில், நடவுப்பணி துவங்கி உள்ளது.

நத்தமாடிப்பட்டியில் கடந்த, 15 நாட்களாக நடவுப்பணி தீவிரமாக உள்ளது. ஆனால், கட்டளை மேட்டு மெயின் வாய்க்காலிலிருந்து நத்தமாடிப்பட்டிக்கு பிரியும் 15ம் எண் கிளைவாய்க்காலில் தண்ணீர் திறக்காமல், பொதுப்பணித்துறை அலுவலர்கள் அடம்பிடிக்கின்றனர்.

இதுபற்றி விவசாயிகள் கேட்டால், "எங்களை கேட்டா நடவுப்பணியில் ஈடுபட்டீர்கள். மேலேயிருந்து எங்களுக்கு உத்தரவு வந்தால் தான் தண்ணீர் திறப்போம்' என அதிகாரிகள் கூறுகின்றனர். இதனால், அப்பகுதியில் நடப்பட்ட நெல் பயிர்கள் அனைத்தும் தண்ணீரின்றி வாடி வருகின்றன. வயல்வெளிகளில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து ரயில்வே ஊழியரான விவசாயி தனபால் கூறியதாவது: பொதுப்பணித்துறை எஸ்.டி.ஓ., (சப்-டிவிஷனல் அதிகாரி), இளநிலை பொறியாளரிடம் கேட்டால், எந்த பதிலும் முறையாக இல்லை. 137 நாட்கள் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ள நிலையில், எங்களுக்கு

முறைவைத்துக்கூட தண்ணீர் திறக்க மறுக்கின்றனர். அவர்களது நடவடிக்கை முழுக்கமுழுக்க பணத்தை எதிர்நோக்கியே உள்ளது.
லஞ்சம் கொடுத்தால் தான் தண்ணீர் திறப்போம் என்பதை சொல்லாமல் உணர்த்துகின்றனர். மெயின்வாய்க்காலில், ஒரு மீட்டர் உயரத்துக்கு மேல் தண்ணீர் சென்றால் கிளைவாய்க்காலில் தண்ணீர் திறக்க வேண்டும். தற்போது, 1.30 மீட்டர் தண்ணீர் செல்கிறது. ஆயினும் அதிகாரிகள் தண்ணீர் திறக்க மறுக்கின்றனர். இது விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் துயரம், என்றார்.
இதுகுறித்து இளநிலை பொறியாளர் ஒருவரிடம் கேட்டபோது, ""நமக்கு சோறுபோடும் விவசாயிகளிடம் பணம் வாங்கினால் நன்றாக இருக்க முடியாது. "ரீடிங்' பார்ப்பதற்காக நேற்று ஒரு நாள் தான் தண்ணீர் நிறுத்தப்பட்டது. இரவுக்குள் நீர் திறக்கப்படும் என தெரிவித்துள்ளோம். ஒரே நேரத்தில் அனைத்து கிளை வாய்க்காலையும் திறந்தால், கடைமடை வரை தண்ணீர் செல்லாது. அதனால், முறைவைத்து திறக்கப்படுகிறது,'' என்றார்.
இதேபோல தான் மாவட்டத்தின் பலபகுதிகளில் நடப்பதாக விவசாயிகள் புலம்புகின்றனர். வறட்சி, பொய்த்துப்போன பருவமழை, வெள்ளம் என இயற்கை ஒருபுறம் விவசாயிகளை வஞ்சித்து வரும் நிலையில், லஞ்சப்பேயாக வலம் வரும் அரசு அலுவலர்களால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.
இதுபோன்ற நிலையை திருச்சி மாவட்ட நிர்வாகம் முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

25.09.2013

## வெங்காயம் விலை குறையும் பவார் நம்பிக்கை



புதுடெல்லி: வெங்காயம் விலை 10 நாளில் குறையும் என்று மத்திய விவசாயத்துறை அமைச்சர் சரத் பவார் கூறினார்.டெல்லியில் நேற்று சரத் பவார் அளித்த பேட்டி:புதிதாக பயிரிடப்பட்ட வெங்காயம் விளைச்சலுக்கு பின் வர தொடங்கியுள்ளது. வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளதால் இன்னும் 10 அல்லது 15 நாட்களில் வெங்காயம் விலை குறையும் என்று நம்பிக்கை உள்ளது. வெங்காய சப்ளையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.இவ்வாறு சரத் பவார் கூறினார்.

## முட்டை விலையில் 10 காசு குறைப்பு



நாமக்கல் : நாமக்கல் முட்டை விலை 10 காசுகள் குறைக்கப்பட்டு, 325 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் முட்டை விலையில் 10 காசுகள் குறைக்கப்பட்டு ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 325 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

புரட்டாசி மாதம் துவங்கியுள்ளதால் முட்டை விற்பனை தமிழகம் மற்றும் கேரளாவில் குறைந்துள்ளது. இதனால், விலை குறைக்கப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.
ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.53 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. பல்லடத்தில் நேற்று ஒரு கிலோ கறிக்கோழி ரூ.52 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது.
மற்ற மண்டலங்களில் முட்டை விலை விவரம் (பைசாவில்) வருமாறு:

சென்னை, 333, பெங்களூரு, 328, மைசூர், 332, ஐதராபாத், 308, மும்பை, 340, விஜயவாடா, 317, கொல்கத்தா, 365, டெல்லி, 319, பர்வாலா, 305.

**மல்பெரி செடி வளர்க்க மானியம்**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்ட கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது.
கூட்டத்தில், பட்டு வளர்ச்சி துறையின் சார்பில் மல்பெரி பயிர் செய்த 2 பேருக்கு மானியத்தொகை ரூ.20,250க்கான காசோலையை கலெக்டர் வழங்கினார். அவர் பேசும்போது, பட்டு வளர்ச்சித்துறையின் சார்பில் மல்பெரிச் செடி வளர்க்க ஏக்கர் ஒன்றிற்கு ரூ.6,750 மானியமாக வழங்கப்படுகிறது. சொட்டுநீர் பாசனம் அமைக்க ரூ.20 ஆயிரம் வழங்கப்படுகிறது. பட்டுப்புழு வளர்ப்புமனை அமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.75 ஆயிரம் வரை அரசு மானியம் வழங்குகிறது. இதனை பட்டுப்புழு வளர்ப்போர் மற்றும் மல்பெரிச் செடி வளர்ப்போர் பயன்படுத்திக்கொள்ள

வேண்டும் என, கலெக்டர் தெரிவித்தார்.

கூட்டத்தில் டிஆர்ஓ ராமர், தனித்துணை ஆட்சியர்கள் செல்வராஜன், சேதுமாதவன் உட்பட அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**கால்நடைகளுக்கு தடுப்பூசி**

சிவகங்கை: காளையார்கோவில் அருகே காஞ்சிப்பட்டி, தவசுகுடி, ஒரு போக்கி, பெரியகிளுவிச்சி ஆகிய கிராமங்களில் மாடுகளுக்கு காணை தடுப்பூசி போடப்பட்டது.

மழைக்காலங்களில் நோய் தாக்குதலில் இருந்து மாடுகளை காப்பதற்காக இந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதில் சுமார் 10க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த 300 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. காளையார்கோவில் கால்நடை உதவி மருத்துவர் காமுகதிரவன், ஆய்வாளர் ரோஸலின் செல்வம், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் மனுவேல், வேதவள்ளி ஆகியோர் சிகிச்சையளித்தனர்.

**நேரடி நெல் விதைப்பு கருவியால் விதைகளை மிச்சப்படுத்தலாம் வேளாண் ஆராயச்சி நிலைய தலைவர் தகவல்**

காரைக்குடி, : நேரடி நெல் விதைக்கும் கருவியை கொண்டு விதைப்பதன் மூலம் 40 சதவீதம் விதைகளை மிச்சப்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என செட்டிநாடு மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் சுவாமிநாதன் மற்றும் உதவிப்பேராசிரியர் கதிர்வேலன் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் நெல்லை சாகுபடி செய்ய டிராக்டர், நாட்டு கலப்பையை கொண்டு விதைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு கூலித் தொழிலாளர்கள், கால்நடைகளையே அதிகம் நம்ப வேண்டி நிலை உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் காலம் தாழ்த்தி பயிர் செய்வதால் மகசூல் குறைவதோடு, அதிகளவில் விதைகளும் தேவைப்படுகிறது. மேலும் நெருக்கடியாக பயிர் செய்வதன் மூலம் நீர், உரம் மற்றும் சூரிய ஒளி முழுமையாக கிடைக்காத நிலை உருவாகிறது.

இந்த பிரச்னைகளை நிவர்த்தி செய்ய காரைக்குடி அருகே செட்டிநாடு மானாவாரி

ஆராய்ச்சி நிலையத்தில் நேரடி நெல் விதைக்கும் கருவி மூலம் பயிர் செய்வது பற்றிய பல்வேறு ஆராயச்சிகள் மற்றும் செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து மானாவாரி ஆராய்ச்சி நிலைய தலைவர் சுவாமிநாதன், உதவி பேராசிரியர் கதிர்வேலன் கூறுகையில், 'விதைப்பு கருவியின் மூலம் குறைந்த செலவில் ஒரு ஏக்கர் நிலத்தை 45 நிமிடங்களில் விதைப்பு செய்யலாம். ஏக்கருக்கு ரூ.500 வரை மிச்சமாகும். தவிர இதன் மூலம் பயிர் செய்யும் போது 40 சதவீத விதைகளை மிச்சப்படுத்த முடியும். பயிர்களுக்கிடையே சரியான இடைவெளி பராமரிக்கப்படுவதால் சீரான விகிதத்தில் சத்துக்கள் கிடைக்கும். நேரடி நெல் விதைப்பில் விதைத்த 3 முதல் 8 நாட்களுக்குள் ஏக்கருக்கு பிரிட்டிலாகுளோர் 175 கிராம் அல்லது பென்டிமெத்தலின் 400 கிராம் வீதம் 25 கிலோவை மணலுடன் கலந்து வயலில் போதுமான ஈரப்பதம் இருக்கும்போது தெளிக்க வேண்டும். விதைத்த 25வது நாளில் களையை கட்டுப்படுத்த 2,4 டிஇஇ சோடியம் உப்பை ஏக்கருக்கு 200 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பயிர் வளர்ந்த 15 முதல் 20வது நாளில் ஏக்கருக்கு பிஸ்பைரிபேக் சோடியம் 10 கிராம் அல்லது அசிம்சல்பியூரான் 15 கிராம் என ஏதாவது  ஒரு களைக்கொல்லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பானை கொண்டு சீராக தெளிக்க வேண்டும். இதன் மூலம் இலைக் களைகள் மற்றும் கோரை, புல் வகைகளை கட்டுப்படுத்தலாம்' என்றனர்.

இதுகுறித்த மேலும் தகவல் பெற 04565283080 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்.

**தர்மபுரி உழவர் சந்தையில் 30 டன் காய்கறி விற்பனை**

தர்மபுரி, : புரட்டாசியையொட்டி தர்மபுரி மாவட்ட ஐந்து உழவர் சந்தைகளில் வழக்கத்தைவிட கூடுதலாக காய்கறி விற்பனை செய்யப்பட்டது.

புரட்டாசி மாதத்தில் பெரும்பாலான மக்கள் அசைவம் சாப்பிட மாட்டார்கள். இதனால் இறைச்சி கடை, மீன் கடைகளில் கூட்டம் குறைந்தது. அதற்கு பதிலாக

காய்கறி விற்பனை அதிகரித்துள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதால், சந்தைக்கு காய்கறி வரத்து அதிகரித்துள்ளது. தர்மபுரி உழவர் சந்தையில் வழக்கமாக 23 டன் காய்கறி விற்பனையாகும். நேற்று, 30 டன் காய்கறி விற்று தீர்ந்தது. உழவர் சந்தைக்கு வந்து செல்லும் நுகர்வோர் எண்ணிக்கை 5900 ஆக அதிகரித்துள்ளது. 54 வகையான காய்கறி விற்கப்பட்டது. ஏ.ஜெட்டிஅள்ளி உழவர் சந்தையில் வழக்கமான 8 டன் காய்கறிகள் விற்பனையாகும். நேற்று 13 டன் காய்கறி விற்பனை செய்யப்பட்டது. இதுபோல் நுகர்வோர் எண்ணிக்கையும் அதிகரித்திருந்தது.

தக்காளி கிலோ ஞ15, கத்தரி ஞ14, வெண்டை ஞ20, முள்ளங்கி ஞ8, கேரட் ஞ16, உருளைகிழங்கு ஞ20, பீன்ஸ் ஞ28, முட்டைக்கோஸ் ஞ18 தர்மபுரி உழவர் சந்தையில் நேற்று விற்பனை செய்யப்பட்டது. வெளிச்சந்தையில் கிலோவுக்கு ஞ4 வரை கூடுதலாக வைத்து காய்கறி விற்பனை செய்தனர். பென்னாகரம், பாலக்கோடு, அரூர் உழவர் சந்தைகளிலும் வழக்கத்தைவிட கூடுதலாக காய்கறி விற்பனை செய்யப்பட்டது.

**வடகிழக்கு பருவமழை துவங்காததால் நெல் விதைக்க தயங்கும் விவசாயிகள்**

வத்திராயிருப்பு, : வடகிழக்கு பருவமழை துவங்குவதில் தாமதம் ஏற்பட்டுளர்ளதால் நெல் விதைக்க விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

வத்திராயிருப்பு பகுதியில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இப்பகுதியில் நெல், தென்னை, மா, வாழை உள்பட பல்வகை பொருட்கள் விளைவிக்கப்படுகின்றன. ஆனால் கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாமல் இப்பகுதி விவசாயிகள் திண்டாடி வருகின்றனர். பிளவக்கல் பெரியாறு, கோவிலாறு அணைகள் மழையின்றி நிரம்பவில்லை. கண்மாய்கள் வறண்ட நிலையில் உள்ளன. விவசாய கிணறுகளிலும் நீர்மட்டம் அதல பாதாளத்திற்கு சென்றுவிட்டது.

கடந்த 15 ஆண்டுகளாக வத்திராயிருப்பு பகுதியில் விவசாய நில பரப்பளவு கணிசமான அளவில் சரிந்துவிட்டது. தற்போது மழை இல்லாமல்

நூற்றுக்கணக்கான ஏக்கரில் தென்னை மரங்கள் கருகி வருகின்றன. இதனை பார்த்து விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். விரைவில் வடகிழக்கு பருவமழை பெய்யும் என்ற நம்பிக்கையில் சில நெல் விவசாயிகள் விதைப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாய கிணறுகளில் ஓரளவு தேங்கியுள்ள தண்ணீரை வைத்து நெல், விதை பாவியுள்ளனர். ஆனால், பல விவசாயிகள் வடகிழக்கு பருவமழை துவங்கிய பிறகு விதைப்பு பற்றி யோசிக்கலாம் என்ற முடிவில் உள்ளனர். ஆனால் வடகிழக்கு பருவமழை காலம் தாழ்த்தி வருகிறது.

விவசாயிகள் கூறுகையில், `முன்பு செப்டம்பர் 15ம் தேதியில் வடகிழக்கு பருவமழை பெய்ய துவங்கிவிடும். டிசம்பர் வரை மழை நீடிக்கும். ஆனால் தற்போது செப்.23ம் தேதி கடந்த பிறகும் மழை துவங்கவ¤ல்லை. மழை பொய்த்துவிடுமோ என்ற தயக்கத்தில் விதைப்பு பணியில் ஈடுபட தயக்கமாக உள்ளதுÕ என்றனர்.

### நிலக்கடலை பயிரில் சிவப்பு கம்பளி பூச்சி தாக்குதல் அதிகரிப்பு

திருச்சுழி, : நிலக்கடலை பயிரில் சிவப்பு கம்பளி பூச்சி தாக்குதல் அதிகரித்து வருகிறது. இதனை கட்டுப்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

திருச்சுழி, நரிக்குடி மற்றும் காரியாபட்டி பகுதிகளில் நிலக்கடலை அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. இந்த பயிர்களில் தற்போது சிவப்பு கம்பளி பூச்சி தாக்குதல் அதிகளவில் காணப்படுகின்றன. இந்த நோயை கட்டுப்படுத்த அருப்புக்கோட்டை வேளாண்மை திட்ட ஒருங்கிணைப்பாளர் பால்பாண்டி, பயிர் பாதுகாப்புத்துறை தொழில்நுட்ப வல்லுநர் ராஜேந்திரன் ஆகியோர் தெரிவித்த ஆலோசனை:

நிலக்கடலை பயிரில் சிவப்பு கம்பளி பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கையாள வேண்டும். சிவப்பு கம்பளி பூச்சி, நிலக்கடலை செடியின் இலையின் அடிப்பகுதியை சுரண்டி உண்ணும். பின்னர் செடியில் உள்ள இலை, காம்பு முழுவதையும் தின்று விடும். ஒரு வயலை சேதப்படுத்திய பின், மற்ற வயல்களுக்கு படை, படையாக சென்று சேதம் உண்டாக்கும்.

கோடை உழவு செய்து கூட்டுப்புழுக்களை அழிக்க வேண்டும். வயல்களில் களைகள் இல்லாமல் பாதுகாக்க வேண்டும். பயிர் சுழற்சி முறையை கடைபிடிக்க

வேண்டும். கண்ணுக்கு தெரிகின்ற முட்டை மற்றும் இளம் பருவ புழுக்களை, கையால் பொறுக்கி அழிக்க வேண்டும். சொக்கப்பன் அல்லது விளக்குப்பொறி ஏக்கருக்கு 3 முதல் 4 வரை வைத்து, தாய் பூச்சிகளை கவர்ந்து அழிக்க வேண்டும்.

**விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

நாமக்கல், :பெருமாப்பட்டி, எருமப்பட்டி மற்றும் வரகூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. பயிற்சியின் போது தரமான மற்றும் சான்று பெற்ற விதைகளின் முக்கியத்துவத்தையும், பயன்கள் பற்றி விதைசான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், விதைச்சான்று அலுவலர் முருகே சன் ஆகியோர் பேசினர்.

இதேபோல், பயிர்களில் தாக்கும் பூச்சிநோய்களை உயிரியல் முறையில் கட்டுபடுத்தும் முறை பற்றி உயிரியியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் ராணி விளக்கி கூறினார். பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சீனிவாசன், தவமணி, கந்தசாமி, முருகேசன், கண்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

**விவசாயிகளுக்கு பண்ணைகுட்டைகள் இலவசமாக அமைத்து தரப்படும் வேளாண் அதிகாரி தகவல்**

பள்ளிபாளையம், : பண்ணைகுட்டைகள் அமைக்க விரும்பும் விவசாயிகளுக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட பணியாளர்களை கொண்டு இலவசமாக அமைத்து கொடுப்பதாக பள்ளிபாளையம் வேளாண் துறை அறிவித்துள்ளது. இது குறித்து பள்ளிபாளையம் வேளாண்மை உதவி இயக்குனர் அசோக் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: விவசாய பூமியில் வழிந்தோடும் மழைநீர் ஓடைகள் வழியாக ஆறுகளிலும் அதன் பின்னர் கடலிலும் கலந்து வீணாவதை தடுக்க பண்ணைகுட்டைகள் அமைக்கப்படுகிறது. இந்த பண்ணைகுட்டைகள் அந்தந்த பகுதிகளில் உள்ள வயல்களில் சேகரமாகி நிலத்தடி நீர்வளத்தை பாதுகாக்கிறது. இதனால் விவசாய கிணறுகளில் நீரூற்று அதிகமாகி வறட்சி காலங்களில் பாசனத்துக்கு பயன்படுத்தப்படுகிறது.

இதன்படி பள்ளிபாளையம் வட்டாரத்தில் தற்போது 28 பண்ணைகுட்டைகள்

அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 85 பண்ணைகுட்டைகள் அமைக்கப்பட உள்ளது.
பண்ணைகுட்டைகளை அமைக்க 100 அடி நீளமும் 50 அடி அகலமும் கொண்ட நீர்சேகரமாகும் தாழ்வான பகுதிகள் வேண்டும். பண்ணை குட்டை அமைப்பதில் விருப்பமுள்ள விவசாயிகளுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் இலவசமாக அமைத்து கொடுக்கப்படுகிறது.
எனவே, பண்ணைகுட்டை அமைக்க விரும்பும் விவசாயிகள் பள்ளிபாளையம் வேளாண்மை அலுவலகத்திலோ, துணை வேளாண்மை அலுவலர் ஞானபிரகாசத்திடமோ பதிவு செய்து கொள்ளலாம்.
இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**கடலூர் உழவர் சந்தையில் குவிக்கப்பட்ட வாழைத்தார்கள்**

கடலூர், : கடலூர் அருகே உள்ள ராமாபுரம், வழிசோதனைப்பாளையம், ஒதியடிக்குப்பம், சாத்தாங்குப்பம், எஸ்.புதூர், வெள்ளக்கரை உள்ளிட்ட 30 க்கும் மேற்பட்ட கிராமங்களில் தொன்று தொட்டு வாழை பயிரிடப்பட்டு வருகிறது.
இப்பகுதிகளில் பத்தாயிரம் ஏக்கரில் வாழை சாகுபடி நடந்து வருகிறது. உரம் மற்றும் பராமரிப்பு பணிக்கு விவசாயிகள் அதிக அளவு செலவு செய்கின்றனர். காற்று மழை புயலில் வாழைமரங்கள் பாதிக்கப்படாமல் பாதுகாத்து தற்போது அறுவடை செய்திருக்கிறார்கள். வியாபாரிகள் சம்மந்தப்பட்ட தோட்டங்களுக்கு, நேரில் சென்று வாழைத்தார்களை ஆர்வமுடன் வாங்குகின்றனர். வாழைத்தாரின் தரத்துக்கு ஏற்ப ரூ. 150 முதல் ரூ. 300 வரை வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். கடலூர் வாழைத்தார்கள் சென்னை, கோவை, பெங்களூர் உள்ளிட்ட இடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது.
இந்த ஆண்டு நடுத்தர விலையில் வாழைத்தார்கள் விற்பனை செய்யப்பட்டன. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படவில்லை. தற்போது 75 சதவீத வாழை அறுவடை முடிந்த நிலையில் தோப்பில் மீதமுள்ள வாழைத்தார்களை விவசாயிகள் உழவர் சந்தைக்கு கொண்டு வந்து விற்பனைக்கு குவித்துள்ளனர். இதனால் உழவர் சந்தையில் பெரும்பகுதி வாழைத்தார்களால் குவிக்கப்பட்டுள்ளது.

இங்கு  சிறு வியாபாரிகள் வாழைத்தார்களை ரூ. 100 முதல் ரூ. 150 வரை விலைபேசி வாங்கிசெல்கின்றனர். அதிக அளவில் வாழைத்தார்கள் குவிக்கப்பட்டிருப்பதால் ரூ. 200 விலையுள்ள வாழைத்தார்கள் விலை குறைவாக விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் பொது மக்களும் வாழைப்பழங் களை ஆர்வமுடன் வாங்கிசெல்கின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.09.2013**

## நடப்பு கரீப் பருவத்தில் பருப்பு உற்பத்தி 70 லட்சம் டன்னாக அதிகரிக்கும்



மும்பை

நடப்பு கரீப் பருவத்தில் பருப்புஉற்பத்தி 70 லட்சம் டன்னாக அதிகரிக்கும். விவசாயதுறை அமைச்சகத்தின் காலநிலை குழு வெளியிட்டுள்ள அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது. இது சென்ற ஆண்டின் இதே பருவத்தில் 59 லட்சம் டன்னாக இருந்தது. பருவமழை நன்றாக பெய்துள்ளது மற்றும் குறைந்தபட்ச கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளதே இதற்கு காரணமாகும் என இந்திய தொழிலக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

செப்டம்பர் 4–ந்தேதி நிலவரப்படி, தென்மேற்கு பருவமழை எட்டு சதவீதம் அதிகமாக பெய்துள்ளது. இதன்காரணமாக பருப்பு பயிரிடும் பரப்பளவு 88 லட்சம் ஹெக்டேரிலிருந்து 1.02 கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளது.

பருப்பு உற்பத்தி 70 லட்சம் டன்னாக அதிகரிப்பதால் குறிப்பிட்ட அளவு ஏற்றுமதி செய்ய வாய்ப்பு உள்ளது என இந்திய பருப்புகள் மற்றும் தானியங்கள் சங்கத்தின் தலைவர் பிரவீன் டாங்கிரி தெரிவித்துள்ளார்.

விவசாய உற்பத்தியில் பெரும் பங்களிப்பை கொண்ட உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், பஞ்சாப், மகாராஷ்டிரா, ஆந்திரபிரதேசம் மற்றும் கர்நாடகா மாநிலங்களில் பருவமழை சராசரியை காட்டிலும் அதிகமாக பெய்துள்ளதாகவும், எஞ்சியுள்ள பருவமழை காலத்தில் (செப்டம்பர்30) மழை சராசரியாக இருக்கும் என வானிலை ஆராய்ச்சி துறை தெரிவித்துள்ளது.

**இயற்கையை அழிப்பதால், பருவமழை பொய்த்துவிட்டது வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேச்சு**



திருப்பரங்குன்றம்,

இயற்கை செல்வங்களான மரங்களை அழிப்பதால் பருவமழை பொய்த்துவிட்டது. அதனால் குடிநீர் தட்டுப்பாடும், விவசாயம் செய்ய முடியாத நிலையும் ஏற்படுகிறது என்று இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் தெரிவித்தார்.

<u>இயற்கை</u>

மதுரை திருநகரில் ஜெயண்ட்ஸ் இயக்கம் சார்பில் விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. அதன் தலைவர் கிருஷ்ணசாமி தலைமை தாங்கினார். செயல் இயக்குனர் அய்யப்பன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் கலந்து கொண்டு பேசும்போது கூறியதாவது:–

செடி, கொடி, மரங்கள் போன்ற இயற்கை செல்வத்தை நாம் அழிப்பதால் தான் பூமி பாதிக்கப்படுகிறது. மனிதர்களை வாழ வைப்பது இயற்கை. ஆனால் நாம் அதை உணராமல் இயற்கையை துன்பப்படுத்துகிறோம். காடு, மலைகளில் இயற்கையாக வளர்ந்த மரங்கள் அழிக்கப்படுவதால்தான் பருவமழை பொய்த்து விட்டது. விவசாயம் குறைந்து வருகிறது. கடற்கரை பகுதிகளில் மரங்கள் அழிக்கப்படுதால் பூமி பாதிக்கப்பட்டு. சுனாமி ஏற்படுகிறது.

<u>ஆர்வம்</u>

இரும்பு, மின்சாரம், சிமிண்ட் ஆகியவை நமக்கு தேவைப்படுகிறது. அதே சமயம் இவற்றை தயாரிக்கும் போது அதிலிருந்து வெளியேறும் நச்சுகளால் பூமி மாசுபடுகிறது. மனிதர்கள் ஒவ்வொருவரும் இயற்கை வளத்தை காப்பாற்ற தங்களை இணைத்து கொள்ள வேண்டும். பிளாஸ்டிக் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். மரங்களை அழிப்பதை கைவிட்டு அவற்றை வளர்ப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தி லட்சுமணன், நிர்மலா பாண்டியராஜன், மஞ்சுநாதராவ், கவுன்சிலர் சந்தியா, முன்னாள் பேரூராட்சி தலைவர்கள் இந்திராகாந்தி, பலராமன், வாசகர் வட்ட பொறுப்பாளர்கள் பொன்மனோகரன், கிருஷ்ணமூர்த்தி, செல்லப்பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கம்பு வரத்து அதிகரிப்பு**

விழுப்புரம்,

விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கம்பு வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. கூடுதல் விலை போவதால் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்.

<u>கம்பு வரத்து அதிகரிப்பு</u>

விழுப்புரம்- புதுச்சேரி சாலையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் உள்ளது. இங்கு விழுப்புரத்தை சுற்றி யுள்ள சுற்று வட்டார கிராமங் களை சேர்ந்த ஆயிரக்கணக் கான விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் பயிரிடும் நெல், கம்பு, உளுந்து,

மக்காச்சோளம், எள், தினை ஆகியவற்றை மூட்டைகளாக கட்டிக்கொண்டு மாட்டு வண்டிகளிலும், டிராக்டர்கள் மூலமும் இங்கு விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இவற்றை வியாபாரிகள் கொள் முதல் செய்து விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டு வாடாவும் செய்து வருகின் றனர்.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கம்பு வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. நேற்று முன்தினம் 500 மூட்டை கம்புகளும், நேற்று அதைவிட சற்று கூடுதலாக 600 மூட்டை கம்புகளும் விற்பனைக்காக வந்தன. இவற்றை வியாபாரி கள் எடைபோட்டு கொள் முதல் செய்தனர்.

<u>விவசாயிகள் மகிழ்ச்சி</u>

100 கிலோ எடை கொண்ட நாட்டு கம்பு மூட்டை ஒன்றுக்கு ரூ.1,320-ம், மொட்டை கம்பு மூட்டை ஒன்றுக்கு ரூ.1,354-ம் விலை போனது. கடந்த வாரம் நாட்டு கம்பு மூட்டை ஒன்றுக்கு ரூ.1,260-க்கும், மொட்டை கம்பு மூட்டை ஒன்றுக்கு ரூ.1,310-க்கும் விலை போனது. கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் அதாவது கடந்த 2 நாட்களாக கூடுதல் விலைக்கு கம்பு விலை கிடைத்ததால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.

தற்போது தான் கம்பு சீசன் தொடங்கியுள்ளது. இதனால் இன்னும் வரத்து அதிகமாக தான் இருக்கும். என விவசாயிகள் தெரிவித்தனர்.

## 10 ஆயிரம் கிலோ தரமில்லாத தேயிலை தூள் அழிப்பு செயல் இயக்குனர் பேட்டி

குன்னூர்,

நீலகிரி மாவட்டத்தில் இது வரை 10 ஆயிரம் கிலோ தேயிலை தூள் அழிக்கப்பட்டு உள்ள தாக தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பல வாணன் தெரிவித்து உள் ளார்.

<u>வட மாநிலங்களில் பச்சை தேயிலை விலை</u>

தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் நிருபர் களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதா வது:-

தென்னிந்தியாவில் சிறு தேயிலை விவசாயிகளால் அறுவடை செய்யப்படும் பச்சை தேயிலைக்கு தேயிலை வாரியத்தின் நடவடிக்கை மூலமாக நியாயமான விலை வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் அசாம், சிலிகுரி, மேற்கு வங்காளம் போன்ற வட மாநிலங்களில் பச்சை தேயிலைக்கு குறைவான விலையே வழங்கப்பட்டு வரு கிறது. வட இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை தூள் ரூ.140 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் பச்சை தேயிலைக்கு ரூ.16-ல் இருந்து ரூ.20 வரை வழங்கு கிறார்கள். தென்னிந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை தூள் ரூ.90 முதல் ரு.100 வரை விற்பனை செய்யப்படுகிறது.

ரூ.8 கோடி மானியம்

ஆனால் பச்சை தேயிலைக்கு ரூ.16-ல் இருந்து ரூ.20 வரை விலை வழங்கப்பட்டு வரு கிறது. சில இடங்களில் ரூ.16 முதல் ரூ.30 வரை வழங்கப் பட்டு வருகிறது. கடந்த 2012-ம் நிதி ஆண்டில் சுமார் ரூ.8 கோடி வரை சிறு தேயிலை விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு உள்ளது.

இந்த மானியம் கவாத்து, நீர்ப்பாசன வசதி, வாகனங்கள் வாங்குதல் போன்றவற்றிற்கு வழங்கப்பட்டு உள்ளது. தாழ்த் தப்பட்ட பிரிவு விவசாயி களுக்கு ரூ.1.60 கோடி வரை மானியம் வழங்கப்பட்டு உள்ளது.

ஆதிவாசி விவசாயிகளுக்கு சுற்றுலா

நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஆதிவாசி விவசாயிகள் தரமான தேயிலை உற்பத்தி குறித்து அறிந்து கொள்வதற் காக சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இவர்கள் திரிபுரா மாநிலத் திற்கு அழைத்து செல்லப்படு கிறார்கள்.

மற்றொரு குழுவினர் அசாமிற்கு அழைத்து செல்லப் படுகிறார்கள். இந்த 2 குழுவினரும் 2 மாதத்திற்குள் அழைத்து செல்லப்படுவார் கள். இந்த ஆண்டில் இது வரை 10 ஆயிரம் கிலோ தர மில்லாத தேயிலை தூள் அழிக்கப்பட்டு உள்ளது.

தேயிலை தூள் மாதிரியை எடுத்து பார்த்ததில் அதில் கிடைத்த முடிவுகள் படி தொழிற்சாலை, தேயிலை கிடங்குகள் ஆகியவற்றில் சோதனை செய்த போது தர மில்லாத தேயிலை தூள் இருப் பது கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இது

போன்ற ஆய்வுகளை தொடர்ந்து மேற்கொள் வோம். இவ்வாறு அவர் கூறினார்.

**உடுமலை அருகே வேளாண்மை மாணவிகளுக்கு இயற்கை விவசாய பயிற்சி**

பதிவு செய்த நாள் : Sep 24 | 11:42 pm



உடுமலை,

கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான வாணவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த இறுதி ஆண்டு இளங்கலை வேளாண்மை மாணவிகளுக்கு வேளாண்மை மற்றும் இயற்கை உரம் தயாரிப்பு குறித்த பயிற்சி முகாம் கடந்த 15 நாட்கள் உடுமலையை அடுத்த மொடக்குப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.

இதில் மாணவிகள் திவ்யபாரதி, இந்துமதி, ஜெனுஷியா, கவிதா, கிருத்திகா, கிருஷ்ணகுமாரி, லிபி அந்தோனி ஆகியோர் மண்புழு, கம்போஸ்ட், பஞ்சகாவ்யா, உயிர் உரம் ஆகிய இயற்கை விவசாயம் குறித்த நடைமுறை பயன்பாடுகள் பற்றி அறிந்து கொண்டனர்.

பயிற்சியில் உடுமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் கலந்து கொண்டு கொண்டு இயற்கை உரத்தின் பயன்பாடு குறித்து மாணவிகளுக்கு விளக்கி பேசினார். பயிற்சியின் முடிவில் மாணவிகள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப் பட்டது.

**உழவர் பாதுகாப்பு திட்டத்தில் ரூ.60 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் அமைச்சர் காமராஜ் வழங்கினார்**

திருவாரூர்,

உழவர் பாதுகாப்பு திட்டத்தில் ரூ.60 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் காமராஜ் வழங்கினார்.

**நலத்திட்ட உதவிகள்**

திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழா விற்கு கலெக்டர் நடராசன் தலைமை தாங்கினார். விழாவில் உணவுத்துறை அமைச்சர் காமராஜ் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறிய தாவது:-

**உழவர் பாதுகாப்பு திட்டம்**

விவசாயிகளின் நலனை காப்பதற்காக முதல்- அமைச்சர் ஜெயலலிதாவால் தொடங்கப்பட்ட உழவர் பாதுகாப்பு திட்டத்தில் கல்வி, திருமணத்திற்கு உதவித் தொகை, இயற்கை மரணம், விபத்து போன்றவற்றிற்கு நிவாரண தொகை வழங்கப் படுகிறது.

ஆதரவற்ற விவசாய கூலித் தொழிலாளர் ஓய்வூதியம், முதியோர் ஓய்வூதியம், கடும் நோய்களால் பாதிக்கப்பட்ட வகளுக்கு தற்காலிக இயலாமை ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

திட்டத்தில் 2011-2012-ம் நிதி ஆண்டில் 11 ஆயிரத்து 698 பயனாளிகளுக்கு ரூ.8 கோடியே 51 லட்சத்து 68 ஆயிரத்து 9 மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**நிதி ஆண்டுகளில் உதவி**

2012-2013-ம் நிதி ஆண்டில் 23 ஆயிரத்து 280 பயானாளி களுக்கு ரூ.14 கோடியே 27 லட்சத்து 38 ஆயிரத்து 212 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்

ளன. 2013-14 ஆண்டில் ரூ.11 கோடியே 33 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 17 ஆயிரத்து 173 பயனாளிகளுக்கு ரூ.10 கோடியே 9 லட்சத்து 44 ஆயிரத்து 40 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

<u>**ஆயிரம் பயனாளிகள்**</u>

விழாவில் திருமண உதவித் தொகை, கல்வி உதவித்தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை யாக ஆயிரத்து 656 பயனாளி களுக்கு ரூ.60 லட்சத்து 49 ஆயிரத்து 150 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் காமராஜ் வழங் கினார். நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மணி மாறன், மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி, ஒன்றிய குழு தலைவர்கள் மலர்மணிகண்டன், வேதநாயகிசிங்காரவேலு, நகரசபை தலைவர்கள் ரவிச்சந்திரன், உமாமகேஸ்வரி கிருஷ்ணமூர்த்தி, கூட்டுறவு வங்கி தலைவர் மூர்த்தி, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணைய தலைவர் விஸ்வநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**கொள்முதல் விலையை உயர்த்தகோரி பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்**

நாமக்கல்,

பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூ.5-ம், எருமை பாலுக்கு லிட்டருக்கு ரூ.7-ம் கொள்முதல் விலையை உயர்த்தகோரி பால் உற்பத்தியாளர்கள் நேற்று நாமக்கல்லில் ஆர்ப்பாட்டம் செய் தனர்.

<u>ஆர்ப்பாட்டம்</u>

பசும்பால் கொள்முதல் விலையை ஒரு லிட்டருக்கு ரூ.5 உயர்த்தி ரூ.25 எனவும், எருமைபால் கொள்முதல் விலையை ஒரு லிட்டருக்கு ரூ.7 உயர்த்தி ரூ.35 எனவும் அறிவித்திட வேண்டும் என் பது உள்ளிட்ட 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று தமிழ்நாடு பால் உற்பத் தியாளர்கள் சங்கம் சார்பில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட் டம் நடத்தப்பட்டது.

நாமக்கல் கலெக்டர் அலு வலகம் முன்பு நடந்த ஆர்ப் பாட்டத்துக்கு மாவட்ட தலைவர் முத்துசாமி தலைமை தாங்கினார். இதில் மாவட்ட செயலாளர் ரங்கசாமி, தமிழ் நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் பெரு மாள், தலைவர் ஆதிநாராய ணன், தமிழ்நாடு பால் உற்பத் தியாளர்கள் சங்க முன்னாள் மாவட்ட செயலாளர் கந்த சாமி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசினர். இதில் சங்கத்தின் உதவி தலைவர்கள் மாரிமுத்து, செங்கோடன், காளியப்பன், மாவட்ட பொரு ளாளர் முருகேசன் உள்பட பலர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர்.

<u>ஊக்கத்தொகை</u>

ஆர்ப்பாட்டத்தின்போது கர்நாடகம் மற்றும் பிற மாநி லங்களில் உள்ளதை போல பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லிட்டர் பாலுக்கு ஊக்கத் தொகையாக ரூ.3 வழங்கிட வேண்டும். ஆவின் கால்நடை தீவனத்தை தரமானதாகவும், தேவையான அளவிற்கும் உற்பத்தி செய்து, 50 சதவீத மானிய விலையில் உற்பத்தி யாளர்களுக்கு வழங்கிட வேண்டும்.

பால் உற்பத்தியாளர்கள் ஆரம்ப கூட்டுறவு சங்கங்களில் உள்ள பணியாளர்கள் அனை வரையும் பணி நிரந்தரம் செய்து, சம்பள உயர்வு வழங் கிட வேண்டும். பால் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு அமைப் புகளில் ஒவ்வொரு ஆண்டும் காலதாமதமின்றி போனஸ் வழங்கிட வேண்டும். தமிழக அரசு சத்துணவு திட்டத்தில் பள்ளி குழந்தைகளுக்கு பால் வழங்க உத்தரவிட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக் கைகள் வலியுறுத்தப்பட் டன.